செந்தமிழ்ச் செல்வி

உள்ளுறை



சிலம்பு-௫௧] வள்ளுவர் ஆண்டு ௨௦௦௮ (வைகாசி. June'77) [பரல்- ௧௦

‘செந்தமிழ்ச் செல்வி’

(செந்தமிழ்த் திங்கள் வெளியீடு)

இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

க. டாக்டர் ந. சஞ்சீவி, எம். ஏ., பி.எச்டி.
தமிழ்த்துறைத்தலைவர், சென்னைப் பல்கலைக்கழகம்

உ. ‘சித்தாந்த கலாநிதி’, உரைவேந்தர்,
ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை, மதுரை.

ங. திரு. கொண்டல், சு. மகாதேவன், எம். ஏ., பி. எஸ்ஸி
இயக்குநர், தமிழகவரசு தமிழ் வளர்ச்சித்துறை, சென்னை

ச. செஞ்சொற்கொண்டல், வித்துவான்,
டாக்டர் சொ. சிங்காரவேலன், எம்.ஏ., டிப். லிங். மாயூரம்.

ரு. டாக்டர் எஸ். வி. சுப்பிரமணியம்,
இயக்குநர், உலகத்தமிழ் ஆராய்ச்சி மன்றம், சென்னை.

சா. புலவர் இரா. இளங்குமரன்,
மு. மு. உயர்நிலைப்பள்ளி, திருநகர், மதுரை-6.

எ. திரு. இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ., பி.லிப்.
நூலகர், மறைமலையடிகள் நூல்நிலையம், சென்னை.

‘‘செந்தமிழ்ச் செல்வி’’
உறுப்பினர் கட்டணம்
(Subscription Rates)

ஆண்டுக் கையொப்பம்

உள்நாடு ரூ. 12 00	வெளிநாடு ரூ. 20 00

ஆயுள் கையொப்பம்

உள்நாடு ரூ. 120 00	வெளிநாடு ரூ. 200 00

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு ௫க	திருவள்ளுவர் ஆண்டு உ௦௦௮, வைகாசி சூன் 1977	பரல் ௧௦

தமிழ்மொழி, கலை முதலியவற்றின் முன்மையும் தொன்மையும் முழுமுதல் தன்மையும்

குமரிக்கண்டம் :

உலகில் முதன்முதலில் மக்கள் தோன்றி வாழ்க்கை தொடங்கிய இடம் கடலுள் முழுகிய குமரிக்கண்டமே என்னும் உண்மை தமிழில் விளங்கும் பழைமையான இலக்கண இலக்கியங்களாலும், நிலவியல் மாந்தவியல் முதலிய பலதுறை ஆராய்ச்சிகளாலும் ஐயுறவுக் கிடமின்றித் தெளிவுற விளங்குகின்றது. நடுநிலை சான்ற உலகப் பேரறிஞர்கள் யாவரும் இவ்வுண்மையை ஒப்புக்கொள்ளுகின்றனர்.

குமரிக்கண்டத்தில் வாழ்வு தொடங்கிய மக்களினத்தவரே உலகின் பல பகுதிகளுக்கும் இடம் பெயர்ந்து சென்று திரிபுற்று வாழ்வாராயினர். அகழ்வாராய்ச்சியாளரால் பெருநகரங்களின் கீழ்ப் புதையுண்டனவாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மாநகரங்களான மொகஞ்சொதரோ, அரப்பா ஆராய்ச்சியால் மிகப் பழைமையான திராவிட நாகரிகமென்று உறுதி செய்யப்பட்டிருக்கும் சிந்து சமவெளி நாகரிகம் இக் குமரிக்கண்டத்தில் தோன்றிப் பரவியதேயா மென்பது ஒருதலை. தோராயமாக 50,000 ஆண்டுகட்கு முன்னர்க் குமரிநிலத்து மக்கள்வாய்ப் பிறந்து வளர்ந்த பெருமொழியாகிய தமிழே உலகின் முதன்மொழி; உயர்தனிச் செம்மொழி. அதுவே ஆங்காங்குச் சென்ற மக்கட கூட்டத்தவரால் பல்வேறு வகையில் திரிபுபடுத்தப்பட்டு வழங்கப்பட்டது. இவ்வாற்றால தமிழே திரவிடத்திற்குத் தாயும் ஆரியத்திற்கு மூலமுமாம் என்பது தானே போதரும்.

தமிழ்:

இயற்கையாக வளர்ந்து செழித்து முழுமையுற்று விளங்கும் தமிழ், மக்கள் வாழ்க்கையில் எத்தனைத் துறைகள் உண்டோ அவை அனைத்திலும் கால்கொண்டுள்ளது. மாந்த அறிவு படர்ந்த இடமெல்லாம் தொடர்ந்து நிறைந்து பொலிகின்றது. அறிவுணர்வினை அகப்படுத்தி வைக்கும் அருங்கலமாகவும், நெறிப்படுத்திச் செல்லும் பெருங்கருவியாகவும் விளங்குகின்றது. வளரும் துறைகளுக்கேற்பத் தானும் வளரும் தகுதியுடையதாகவும் திகழுகின்றது. தொன்மை, முன்மை, செம்மை, மும்மை, இனிமை, தனிமை, இளமை, வளமை, இயன்மை, வியன்மை, தாய்மை, தூய்மை, திருமை, பெருமை, ஒண்மை, வண்மை ஆகிய பதினாறு பேறுகளும் பெற்றுப் பாங்குறப் பொலிகின்றது. அயன்மொழிகளாகத் திரிபுற்றவற்றால் அடுக்கடுக்காகத் தாக்குதல்கள் நேரினும் அவற்றுக்கெல்லாம் எதிர் நின்று இன்றுகாறும் நின்று நிலவுகின்றது. இற்றை நாளில் தோன்றி வழங்கும் புதுமைத் துறைகள் பல தமிழில் விளக்கமாக எழுதப்படாமைக்கு அடிமையும் மடிமையுமுற்றுக் கிடக்கும் தமிழ் மக்களே காரணியமாவதன்றித் தமிழ் காரணியமாகாது. ஆதலின் தமிழ் சிறிதுணையும் குறைபாடுடையதாக மாட்டாது. தமிழில் என்ன புதுமை இருக்கிறதென்று வாய் நீட்டுவோர் இதன் உண்மையினை யறியார்.

தமிழ்நூற் சிறப்பு:

தமிழில் தோன்றி விளங்கிய மிகத் தொன்மை வாய்ந்த பற்பல இலக்கண இலக்கியங்களும், எண்ணற்ற பல்துறை தழுவிய கலை நூல்களும் அழிந்துவிட்டன; அயலினத்தவரால் திட்டமிட்டு அழிக்கப் பட்டுவிட்டன. ஆயினும் ஆனையடிச் சுவடு கண்டு ஆனை சென்றதை அறிதல்போல இன்று நம் கைக்குக் கிட்டியுள்ள நூல்களில் பழைமை வாய்ந்தனவற்றைக் கொண்டு அக் காலத்திய சிறப்பு நிலையை நாம் ஒருவாறு கணிக்க முடிகின்றது.

தொல்காப்பியம் முழுமையான இலக்கண நூலாகவும், பிற மொழி இலக்கணங்கள் போலாது தமிழுக்கே யுரிய பொருளிலக்கணத்தை உள்ளடக்கியதாகவும் உள்ளது. களவியல் கற்பியல் என்னும் அகத்திணைப் பாகுபாட்டு முறைகளும், அறநெறி பிறழாப் போர் முறையும் பல்வகைத் தொழில்களும் கலைகளுங் கூறும் புறத்திணை இயலும், பிறவும் தமிழுக்குத் தனிச் சிறப்பளிப்பன. தொல்காப்பிய முடிபுகள் பல இற்றைக்கால மொழி நூல் வல்லுநர்களின் ஆராய்ச்சி முடிபுகளுக்குப் பெரிதொத்து விளங்குவது வியக்கத் தக்கதாய் உள்ளது.

இற்றைக்கு ஈராயிரம் யாண்டுகட்கு முன்னர்த் தோன்றிய தெய்வத் திருக்குறளோவெனின் மெய்யுணர்வு மிளிரும் மேன்மையதாகவும், ஒப்புயர்வற்ற வாழ்வியல் அறநூலாகவும், உலகப் பொதுமறையாகவும் அமைந்துள்ளது. நடுவுநிலை வழுவாத நல்லறிவு சான்ற உலகப் பேரறிஞர்கள் பலரும் முடிமணியாகக் கொண்டு பாராட்டும் பெற்றி சான்ற நூல் திருக்குறளைத் தவிரப் பிறிதொன்று இல்லை என்பது உறுதி. அதனாலன்றோ அப் பெருமக்கள் பலர் தாமே தத்தம் மொழிகளில் திருக்குறளைப் பெயர்த்துக் கொண்டனர். இத்தகைய விழுமிய வாழ்வியல் நூலொன்று ஈராயிரம் யாண்டுகட்கு முன்னர்த் தோன்றியமை அதன் தோற்றத்திற்கு நிலைக்களமான தமிழ் நிலத்துப் பெருமக்களின் மரபு வழிப்பட்ட நனிமிகப் பழைமையான வாழ்க்கை மேம்பாட்டினை விளக்குகின்றது.

முதலிரு தமிழ்க் கழகங்களும், அக் காலத்து நிலவிய பல்துறைப் பெருநூல்களும் அழிவுற்றமையால் இப்பொழுது கழகநூல்கள் எனப்படுவன கடைக் கழகக் காலத்து நூல்களேயாம். பத்துப்பாட்டு, எட்டுத்தொகை நூல்கள் உள்ளது புனையும் உயரிய இலக்கிய நெறியில் அமைந்து விளங்குகின்றன. உயிரியல், வானியல் முதலிய பலதிறப்பட்ட இக் கால அறிவியல் ஆராய்ச்சியாளரும் வியந்து பாராட்டும் வண்ணம் அரிய பல அறிவியற் கருத்துகள் மிளிரும் சிறப்பினவாகவும் வாழ்க்கைப் பண்பாட்டு இலக்கியங்களாகவும் அமைந்துள்ளன. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களிற் பெரும்பாலன பலதரப்பட்ட உயரிய அறிவுரை பகரும் அறநெறி இலக்கியங்களாக அமைந்துள்ளன.

வரலாற்று அடிப்படையில் தோன்றிய சிலப்பதிகாரம் தமிழ் நாட்டின்-தமிழ்மொழியின் தனிச் சிறப்பு வாய்ந்த பெருமைமிகு இலக்கியமாகும். சேர, சோழ, பாண்டிய மண்டலங்களின் வளமையும், மூவேந்தர்தம் ஆட்சியின் மாட்சியும், தமிழ்ப் பெருமக்களின் பேராண்மையும், கற்பு மேம்பாடும் பிற பண்பாடு நாகரிகங்களும், இசை, நாட்டியம் முதலிய பல்வகைக் கலை நிலைகளும் இன்ன பிறவும் இலங்கக் காட்டும் எழின்மிகு ஆடி போலமைந்து, உட்பகையுற்ற தமிழினத்தை ஒற்றுமைப்படுத்திப் பொது எதிரியைப் புறங்காணச் செய்யும் உணர்வையூட்டும் உயரிய முத்தமிழ்ப் பெருநூலாக விளங்குவது சிலப்பதிகாரமே. அனைத்துலக இலக்கியங்களையும் ஆராய்ந்தோர் சிலம்பின் தனித் திறத்தைப் பெரிதும் வியந்து பாராட்டுகின்றனர்.

இணையற்ற இறைவழிபாட்டு இலக்கியங்களான திருமுறை நூல்கள் முதலியன ஊனை உருகச் செய்யும் இயல்புவாய்ந்தன.

வேற்றுச் சமயம் பரப்பவந்த வெளிநாட்டுக்காரரான பேரறிஞர் போப்பையர் அவர்களைத் தமிழ்மாணவனுக்கிய பெருமை 'என்புருக்கி' என்று சிறப்பிக்கப்பட்ட திருவாசகத்திற்கு உண்டு. இறைவனார் அருட்செயல்களின் வெளிப்பாடாக உள்ள தேவாரம் இறையுணர்வைத் தாங்கியுள்ளது மட்டுமன்றி இன்றமிழ் இசைக்கலை தேங்கியுள்ள இருப்பிடமாகவும் இலங்குகின்றது. திருமந்திர நூலின் அருமந்த பெருமையை முற்ற முடிய அளவிட்டுரைக்கும் ஆற்றல் வாய்ந்தவர் யாவர்? அகச் சான்று புறச்சான்றுகளுடன் தெளிவுற விளங்கும் தமிழ் நிலத்துப் பெருமக்கள் வரலாற்றுப் பெட்டகமாகத் திகழும் திருத்தொண்டர் வரலாறு மண்ணுலகை விண்ணுலகாக்கும் மாட்சியுடைய தன்றோ?

தமிழர் சமயம் :

தமிழர்தம் சமயச் செந்நெறி "மதம் மூடநம்பிக்கை" என்னும் உரையை வீழ்த்தும் வகையில் ஏதுக்களாலும் எடுத்துக் காட்டுகளாலும் ஏரணவியலுக்கும், அறிவியலுக்கும் பொருந்தும் வண்ணம் திருந்திய நிலையில் அமைந்துள்ளது. சிவநெறி ஏனைச் சமயங்களைப்போல் கதைகளை அடிப்படையாக் கொண்டு அறவுரை அறிவுரை கூறும் அளவில் நில்லாது அறிவராய்ச்சியோடு கூடிய விழுப்பம் வாய்ந்த மெய்கண்ட நூல்களைக் கொண்ட மேன்மையுடையதாகும். சிவநெறிக் கொண்முடிபு (சைவசித்தாந்தம்) தமிழர் வாழ்வின் உச்சநிலைக் கோட்பாடாகும்.

திருக்கோயில்கள் :

தமிழ்நாட்டுத் திருக்கோயில்கள் வழிபாட்டுக் கூடங்கள் மட்டுமல்லாது வரலாற்று மூலமான கல்வெட்டுகளின் இருப்பிடமாகவும், தமிழ்ப்பெருமக்களின் உயரிய சட்டடக்கலை வன்மையைப் புலப்படுத்தும் எடுத்துக்காட்டுகளாகவும் ஏற்ற முற்றுத் திகழுகின்றன. கற்சிற்பம், மரச்சிற்பம் (தேர்), ஐம்பொன் திருவுருவ வார்ப்படம், ஓவியம், இசை, கூத்து, நாட்டியம், நாடகம், இலக்கியம் முதலிய பலவகைக் கலைகளும் நலமுற விளங்கும் வளாகங்களாகவும், கல்விச்சாலைகளாகவும், மருத்துவமனைகளாகவும், மக்கள் மன்றமாகவும், பயனுற விளங்கும் பான்மையனவாம்.

புராணங்கள் :

கந்தபுராணம், திருவிளையாடற்புராணம், காஞ்சிபுராணம், கம்பராமாயணம் முதலியன மெய்ப்பொருள் விளக்கும் உருவகக் கதைகளாகவும், இறைவனின் அருட்செயல்களை விளக்குவன

வாகவும், கற்பனையின் உச்சநிலையைக் காட்டுவனவாகவும் அமைந்தனவாம்.

அறநெறி நூல்கள் :

சிறியோர் முதல் பெரியோர் வரை யாவரையும் நெறிப்படுத்தும் நீர்மையனவும், அனைவரும் கடைப்பிடிக்கத் தக்கனவுமான அறவுரைகளை மொழிநிலையில் படிமுறையாக அறிவுறுத்தும் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, நன்னெறி, உலகநீதி முதலிய எண்ணற்ற நூல்கள் தமிழின் அருமையையும் எளிமையையும் ஒருங்கு புலப்படுத்தும் உயர்வுடையன.

இலக்கிய அமைப்பு :

உள்ளத்து உணர்வுகளைச் செவ்விய முறையில் புலப்படுத்தும் வெளிப்பாடே கலைகளாக மிளிருகின்றன. கலைகள் பலவற்றுள்ளும் உயரியது இலக்கியக்கலையே என்பது அறிஞர்கள் முடிபு. இலக்கிய அமைப்புகள் மனப்பாங்கையும் புறச்சூழல்களையும் எடுத்துக்காட்டும் இயல்புவாய்ந்தன. பேரிலக்கியங்களல்லாது சிற்றிலக்கியங்கள என்று வழங்கப்படுவன தொண்ணூற்ருறு வகையின என்று கூறப்படுகின்றன. ஆயினும் அண்மைக் காலத்தில் இதுபற்றி ஆராய்ந்தவர்கள் ஏறத்தாழ இருநூற்றைம்பது வகையான சிற்றிலக்கிய அமைப்புகள் தமிழில் உள்ளனவென்று தெரிவித்துள்ளனர். ஒவ்வொரு வகையிலும் பற்பல நூல்கள் உள்ளன. மற்றும் தனிப்பாடல்களுக்கோ அளவே இல்லை.

வாய்மொழி இலக்கியம் :

தமிழ்நாட்டிலும், பண்டு தமிழ்வழங்கிய கருநாடகம், ஆந்திரம், கேரளம் ஆகிய நிலப்பகுதிகளிலும், நாகரிக வளர்ச்சியுருத பழங்குடி மக்களிடத்தும், தமிழ்ப் பெருமக்கள் நெடுங்காலமாக வாழ்ந்துவரும் அயல்நாடுகளிலும் தொன்றுதொட்டு மக்கள் வாய்மொழியாக வழங்கிவரும் நாட்டுப்பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள், உவமைகள், மரபுத்தொடர்கள், தொழில் அடிப்படையில் வழங்கும் சொற்கள் முதலியனவும், வில்லுப்பாட்டு, தாலாட்டு, நலுங்கு, ஒப்பாரி முதலியனவும், தொழில் அடிப்படையில் அமைந்த ஏற்றப்பாட்டு, நடவுப்பாட்டு முதலியனவும், விளையாட்டு அடிப்படையில் தோன்றிய சடுகுடுப் பாட்டு, கும்மிப்பாட்டு முதலியனவும், இன்னு பிறவும் இதுகாறும் முழுமையாகத் திரட்டப்படவில்லை; அம் முயற்சியில் முழுமூச்சாக யாரும் தலைப்படவுமில்லை. தமிழ்நாட்டில் வழங்குவன சிற்சில மட்டும் இப்போது வெளிவந்துள்ளன. தமிழில் தோன்றி அயலின மொழிகளில் திரிபுற்று வழங்குவனவும் பல உள. அவற்றையும் முறைப்பட ஆராய்தல்

வேண்டும். மேற்கூறியாங்கு அயல் நிலங்களிலும் முயற்சி மேற்கொள்ளப்படுமாயின் பைந்தமிழின் அளவிறந்த பரப்பெல்லாம் மேலும் பாங்குற விளங்கும்.

உரைநூல்கள் :

மூலநூல்களின் நுண்பொருள்களையும், சிறப்பையும் விளக்கும் பல்வகை விழுமிய உரைகள் தமிழுக்குத் தனிச்சிறப்பாய் விளங்கும் பெற்றியன. தொல்காப்பியம், திருக்குறள், சிலப்பதிகாரம், சிவஞானபோதம், சிவஞானசித்தியார் முதலியவற்றுக்கு அமைந்துள்ள பற்பல உரைகளும், மற்றும் இறையனார்களவியலுரை திருச்சிற்றம்பலக்கோவையாருரை திருவாசக விரிவுரை முதலியனவும் குறிப்பிடத்தக்க சிறப்பு வாய்ந்தன.

தமிழர் பெருங்கொடை :

மொழிநிலையிலும் மற்றும் தொழில், கலை, நாகரிகம், பண்பாடு முதலியவற்றிலும் தமிழர் உலகிற்கு வழங்கியவை நூற்றுக்குத் தொண்ணூற்றுக்கு மேலாகவும், உலகத்தினின்றும் பெற்றவை நூற்றுக்குப் பத்துக்குங் குறைவாகவும் இருக்கும்.

இன்று உலகம் முழுவதும் பெருவழக்காக உள்ள 1, 2, 3 முதலிய எண்ணுப்பெயர் வடிவம் தமிழர் உலகுக்களித்த பெருங்கொடையன்றோ? அறிவு விளையாட்டான நாற்படை (சதுரங்கம்) பண்டைத் தமிழர் போர் முறையை இன்றும் உலக அரங்கில் பறைசாற்றிக்கொண்டிருக்கின்றதே !

தமிழர் கடமை :

ஆ! நம் தமிழ்மக்கள் உலகின் மூலத் தாய்மொழியாகவும் உயர்தனிச் செம்மொழியாகவும் விளங்கும் தமிழைத் தாய்மொழியாகப் பெற்றிருந்தும், உலக நாகரிகத் தொட்டிலான குமரிப் பெருநிலத்துத் தமிழினத்தின் கால்வழியினராயிருந்தும், முழுதுலகமும் போற்றும் முப்பால் நூலையும் மற்றும் முத்தமிழ் நூல்களையும் பெற்றிருந்தும், அறிவியல் சமயத்தை யுடையவராயிருந்தும், வேளாண்மை வணிகம் முதலிய தொழில்களிலும் நுண்கலைகளிலும் வல்லுநராயிருந்த மேம்பாடிருந்தும், எள்ளளவும் தாய்மொழிப் பற்றும், தமிழினப் பற்றும் இல்லாதவராய் நாளுக்குநாள் நலிந்து வருகின்றனரே ! இவ் விழி நிலை நீங்கிப் பண்டுபோல் ஏற்றமுறுவது எப்போது?

தமிழா எழுச்சிகொள் ! தாய்மொழியைப் போற்று ! துறைதோறும் துறைதோறும் தமிழுக்குத் தொண்டு செய்யத் துணிவுகொள் ! தமிழினத்தை மேம்படுத்தச் சூளுரைத்து முனைந்து நில் ! உலகம் முழுதும் கடைப்பிடிக்கத் தக்க நின் உயரிய நாகரிகத்தையும் பண்பாட்டையும் காப்பாற்றிப் பெருமைகொள்!

குறிப்பு : இக் கட்டுரைக்கு அறிஞர்கள் மேலும் விளக்கங்கள் எழுதியனுப்பலாம்.

சிவஞானபோத ஆராய்ச்சி

[அருட்டிரு அழகரடிகள்]

(சிலம்பு ௩க, பரல் ௬, பக்கம் ௪௪அ இன் தொடர்ச்சி)

இந்த ஆறு வழிகளில் 'மறை' என்னும் 'மந்திரம்' உச்ச மானது. பொருள்களில் கலை ஏற்றமானது. மறைத்திறம் பெற்றுவிட்டால் ஏனைக் கலைத்திறம் முதலியன மெய்யுணர்வில் தழைக்கும்; ஆதலால், எல்லாரும் திருமுறை முதலிய மறைகளை ஓதும் நற்பேறு பெற்று, மேல் நிலையை அடைதல் முக்கிய மாகும்.

மாயையிலிருந்து பூத்துவரும் எல்லாவற்றிலும் 'மறை மொழி' இங்ஙனம் உயர்வாய் இருப்பதனால், மக்கள் பொதுமறை சிறப்பு மறைகளாகிய திருக்குறளையும் திருமுறைகளையும் ஓதி நலமடைதலை இழந்து விடலாகாது; அது உய்வுக்குரியது.

வாழ்க்கையில் :

இனி, இந்த ஆறு வழிகளும் வாழ்க்கையில் எங்ஙனமெல் லாம் விளங்குகின்றன என்பதைப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

மறைமொழிகள் நிறைமொழி மாந்தர்பாற் காணப்படும். நாமும் நிறைமொழிச் சான்றோராய் விளங்கும்போது நம்மிடத்தி லிருந்து தோன்றும் வாக்குகளும் மறைமொழிகளாகும். மறைகளைக் கையாளும்போது, அவற்றின் மதிப்பிற் கருத்து வைத்து, விழிப்பாகவும் தூய்மையாகவும் உருக்கமாகவும் உண்மையாகவும் ஓதுதல் வேண்டும். முத்தமிழிலும் இவை அமைந்துள்ளன.

ஓதுவாரேயன்றி அனைவரும் தத்தமக்கு வாய்ந்த முத் தமிழ்த் திறங்களாலும் ஓதிவரலாம். விழிப்பும் தூய்மையும் உருக்கமும் உண்மையும் எல்லார்க்கும் பொது. முத்தமிழ்த் திறங்களாவன இயற்றமிழ் அறிவு, இசைத்தமிழ்ப் புலமை, நாடகத்தமிழ் அவிநயம் முதலியன. யார் யாருக்கு எவ்வெவ் வளவு இவற்றில் வல்லமை உண்டோ அவ்வவ்வளவில் பயன் படுத்தி உய்யலாம்.

"கோழை மிடறாகக் கவிகோளு மிலவாக இசைகூடு மதனால்
ஏழையடி யாரவர்கள் யாவைசொன சொல்மகிழும் ஈசன்"

என்னும் தேவாரத்தினாலும் இதனை அறியலாம்.

'மறைமொழி' என்பது, 'எளிதில் உய்த்துணர முடியாத நுட்பமொழி' என்று பொருளாகும். இதனால் அதன் மேன்மை விளங்கும். நூல்கள் எல்லாவற்றிலும் மறை நூலே மேலானது. அவற்றைக் கொண்டு உயிர்கள், உற்று நோக்கி உண்மைகளை அறிந்துகொள்ளலாம்.

மாந்தர் வாழ்வுக்கு மறைகள் இன்றியமையாதன. மக்கள் உண்மையான உள்ளத்துடன் அவற்றை அணுக வேண்டும். மறைமொழி அல்லாத கலைகள் பலவற்றாலும் கல்வி நிலைகளாலும் உலகம் ஓங்காது. மறைமொழிகளை யாரும் பொருள் செய்யாமல் உய்ந்துவிட முடியாது.

உலகத்தில் உயர்வு என்பது, நுட்பப் பொருள்களிலேதாம் உள்ளது. பழங்கள் என்று எடுத்துக்கொண்டால், கண்ணுக்குத் தெரியும் தோல் பகுதியை விட மதிப்பு அதன் உட்பகுதியிலே தான் உள்ளது. ஒரு நகைப் பெட்டியின் மேற்பகுதியை விட, நகைகள் இருக்கும் அதன் உட்பகுதியே சிறப்பானது. இப்படியே எல்லாம்; அதுபோலக் கல்வி கலை நூல்கள் எல்லாவற்றையும் விட, மறைநூல் மேலானவை. நுட்பங்கள் மிகுந்தவை; எண்ணும் எழுத்தும் என்பதிற் கல்வி நூல்கள் எழுத்தைச் சேர்ந்தவை. கலை நூல்கள் எண்ணைச் சேர்ந்தவை; கல்வி நூல்களில், கலையிலக்கியங்கள் அல்லாத ஏனை இலக்கியங்கள் எல்லாம் சேரும்.

இலக்கியமும் மறையும் :

ஒரு கருத்தை அல்லது வரலாற்றைச் சுவையோடு சொல்லும்போது 'இலக்கியம்' எனப்படும். பல சுவைகளோடு 'சமநிலைச் சுவையும்' நுண்பொருள்களும் விளங்குமானால், அது 'மறை நூல்' எனப்படும்.

இலக்கியங்களில் 'மகிழ்ச்சி' 'வருத்தம்' முதலிய எண் வகைச் சுவைகள் உண்டு.

"நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப"

என்பது தொல்காப்பியம்.

ஒவ்வொன்றும் தோன்றும் அடிப்படை நிலைகளையும் பிற நிலைக்களங்களையும் அது மேலும் கூறும். உணர்வுடை மாந்தர்க் கல்லது இவை தெரிவது அருமை. ஆதலால் இலக்கியமும் ஓரளவு உள்ளுணர்வுடையதே. அதைவிட அருள் நூலாகிய மறை நூல் பெரிது.

ஒவ்வோர் இலக்கியப் பகுதிகளைப் படிக்கும்போதும் ஒவ்வொரு சுவை தோன்றும். கடவுள் நூல் என்றால், இலக்கியங்களிலேயே அது மெய்ப்பொருட் சுவையோடு அதாவது சமநிலைச் சுவையோடு விளங்கும். சமநிலைச் சுவை, ஒன்பதாவது சுவை. எந்தப் பகுதியைப் படித்தாலும் இலக்கியச் சுவைகளின்படி நகையோ அழுகையோ தோன்றாமல் சம உணர்வோடு நிற்பது சமநிலைச் சுவையாகும். 'சம ரசம்' என்பதும், 'சமரச சன்மார்க்கம்' என்பதும் 'மெய்ஞ்ஞான உணர்வு' என்பதும் இது. அதை உண்மைச் சுவை என்றும் பாராட்டலாம்.

ஒலி புலகம் :

அதனால் அச் சுவை மெய்ச்சுவை அல்லது கடவுட்சுவையாகின்றது. திருக்குறளுக்குப் 'பொய்யா மொழி' எனப் பெயர் இருப்பது அந் நூலின் உண்மைத் தன்மையை இனிது விளக்கும். மறைநூல், இலக்கியத்தோடும் நீதிகளோடும் கூடியிருப்பது இயல்பு; கூடியிருந்தாலும், 'நீதி நூல்' என்றாவது 'இலக்கிய நூல்' என்றாவது மறைகள் பெயர் பெறுவதில்லை; மேம்பாடு தோன்ற 'மறை நூல்' என்றே பெயர் பெறும். மறைநூல், மற்ற நூல்களை விடக் காலத்தாலும் முந்தியது; முதல் நூலுமாகும்.

> "வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
> முனைவன் கண்டது முதல்நூல் ஆகும்"

இதில் 'முனைவன்' என்று ஆசிரியன் குறிக்கப்பட்டமை நினைவுகூர்தற்குரியது. திருக்குறட் பொதுமறை இப்போது முதனூலாய்த் திகழ்கிறது. முப்பொருள் நடைமுறைகளையும் பயன்களையும் இம் மறை நூல் உடையதாயிருக்கிறது. இவற்றைக் கூறும்போது வாழ்க்கைக்குத் தேவையான முறையில் மறை நூல், தலைப்புகள் வகுத்துக் கொள்ளும் என்று தெரிகிறது.

'பதம்' என்பது இவற்றில் வரும் சொற்கள் எழுத்துக்கள் என்பதும் இவற்றில் வரும் எழுத்துக்களே. எழுத்துக்கள் மட்டும் தெரிந்தவர்களும், மொழியிற் பதங்கள் வரையில் அறிந்தவர்களும், இவற்றிற்கும் மேல் நிறைமொழி மாந்தராய் மறை மொழிகள் காண்பவரும் உண்டு. ஆதலால் மூவகையான மொழிப் பிரிவுகள் பகுத்துக் கொள்ளப்பட்டன.

குறிப்பிட்ட சில பதங்களும் எழுத்துக்களும் மட்டும் இப் பிரிவுக்கு ஒவ்வா; காரணம், அவற்றால் மட்டும் மறைப் பகுதிகள் அடங்கி விடுவதில்லை.

பொருளுலகம் :

இனி, ஒளிப் பிரிவுகளில் 'கலைகள்' என்பன, முதலில் அமையும் நுண்ணிய பகுதிகள்; ஆண்டவன் அம்மையோடு இயைபுற்று, இயல்பான இரக்கத்தால், மாயையைக் கிளரச் செய்தபோது, நுட்பமான மாயைப் பிரிவுகளாய் விரிந்தன; பிரிவு பட்டதனுல் கலைகள் என்று பெயராயிற்று. ஆழ்ந்த உணர்வோடும், தொழில் முறைக்கு ஏற்ற காரணமாகவும் தோன்றுதலால், 'கலைகள்' ஆயின; தூய மாயையில் தோன்றும் இவை, அருட் கலைகள் !

அக் கலைகள் ஐந்து வகை. அவை, பேரமைதிப் பிரிவு, அமைதிப் பிரிவு, மறைப் பிரிவு, ஆசிரியத் தலைமைப் பிரிவு, மெய்யுரைப் பிரிவு என ஐந்தாகும். (சாந்தியதீதை, சாந்தி, வித்தை, பிரதிட்டை, நிவர்த்தி என முறையே சொல்லப்படும்) இந்த ஐந்து கலைகளும் பிரிவுபடுவதற்கு முன் நிலை 'குடிலை' எனப்படும்.

ஒவ்வொரு கலையிலிருந்தும் பலவேறு வகையான அண்டங்களும் கருவிகளும் பூத்தன. இவற்றிற் கலைகள் மிகு நுட்பப் பிரிவுகள்; அண்டங்கள் நுட்பப் பிரிவுகள்; கருவிகள் பருமைப் பிரிவுகள்.

இனிக் கலைகளிலும், மற்றக் கலைகளைவிடப் பேரமைதிப் பிரிவு (சாந்தியதீதை) நுட்பமானது. அப்படியே அண்டங்கள் கருவிகள் ஒவ்வொன்றிலும் நுட்பமும் பருமையும் உண்டு. அப்படி அமைந்திருப்பது, ஒன்றை ஒன்று இயக்க உதவுகிறது. இவையெல்லாவற்றையும் உள்ளுணர்வு தெளிந்து கொள்கிறது.

இந்த அறுவகை வழிகளும், உடம்பில் நன்கு காணப்படுகின்றன. உடம்பிற் பொருந்தியுள்ள உயிர் இந்த ஆறு பிரிவுகளையும் உணர்ந்து இவற்றின் வழியே அருளில் தாவி மேன்மையடைய வேண்டும். பிறவியிற் சிக்கினுல், செய்யப்படும் வினைகள், இவை ஆறு வகையிலும், செய்வோர் நிலைக்கு ஏற்ப அங்கங்கே தங்கிவிடும். அருளில் முன்னேறுவார்க்கு அவையெல்லாம் தூய்மை செய்யப்பட்டு விடும்.

வழி முழுதும் கடந்தபின் மாயையின் இவ்விரிவுகள் ஒடுங்கிவிடும். முன்னேற்றம் என்பது மூலமலத்தின் ஒடுக்கமும் திருவருட்பேறுமாதலின், இடையில் விரிந்த மாயைகளும் வினைகளும் தத்தம் மூலங்களில் இறையருளால் ஒடுக்கப்பட்டு, வினையோடு கூடிய மாயை தங்குமிடமும் அருளில் அமைகிறது. அருளின் ஒடுக்கம், இறைவனேயாவான்.

"பெண்ணுரு ஒருதிறன் ஆகின்று அவ்வுருத்
தன்னுள் அடக்கிக் கரக்கினும் கரக்கும்".

என்று புறநானூறுங் கூறும்.

இனிக் கருவிகள் பற்றிச் சில கவனித்துக் கொள்ளலாம். இவற்றை முப்பத்தாறு வகையாகவும் பெரியோர் வகுப்பர். இவற்றில் தூய மாயையின் பிரிவு ஐந்தும், தூவா மாயையின் பிரிவு முப்பத்தொன்றுமாம். தூவா மாயை கலைப் பிரிவு (மிசிர மாயை), உலகப் பிரிவு (பிரகிருதி மாயை), என்று பின்னும் இருவகைப்படும். முறையே ஏழு கருவிகளும் இருபத்து நான்கு கருவிகளும் தோன்றும்.

இவையெல்லாம் உண்மையா என்று பகுத்தறிவாலும் ஓரளவு அறிய முடியும். எதிரில் இருப்பது உலகம்; உயிர் பொருந்தியது உடம்பு. உலகம் பெரியது. உடம்பு சிறியது; ஆயினும் உடம்போடு உயிர் சேர்ந்திருப்பதனுல் அவ்வுடம்பு உலகத்தைவிட மாட்சிமையாகக் கருதப்படுகிறது. உடம்பில் முப்பத்தாறு கருவிகளும் உண்டு; ஆக,

உலகம், 'மண்' 'நீர்' 'தீ' 'காற்று' 'வானம்' என ஐந்து பெரும் பொருள்கள் கலந்து காணப்படும்.

"நிலந்தீ நீர்வளி விசும்போடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம்"

என்பது தொல்காப்பியம். இவ்வைந்தும் உடம்பிலும் உள்ளது.

உலகத்திலுள்ள இந்த ஐந்தையும் உடம்பு பெற்றிருப்பதோடு அவற்றை நுகரும் புலன்களையும் உடம்பு கொண்டிருக்கிறது. நுகருங் கருவிகளாகிய மெய் வாய் கண் மூக்கு செவி என்பவற்றிற்கு அறிகருவிகள் (ஞானேந்திரியங்கள்) என்று பெயர். அவற்றின் செயல்களைத் திருவள்ளுவர் 'கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புலனும்' என்று விளக்குவார்.

இவற்றோடு, வாக்கு பாதம் பாணி எருவாய் கருவாய் என ஐந்து கருவிகள் வேறு தொழிற் கருவிகளாக (கன்மேந்திரியங்கள்) உடம்பு பெற்றிருக்கிறது.

ஆக, மண், நீர், தீ, காற்று, வானம் என்னும் ஐந்து பெரும் பொருள்களும், இவற்றின் மூலங்களாகிய சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்னும் ஐந்து நுண் பொருள்களும், இவைகளை நுகரும் மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் அறி கருவிகள் ஐந்தும், வாக்கு, பாதம், பாணி, எருவாய், கருவாய் என்னும் தொழிற் கருவிகள் ஐந்தும் என இருபது கருவிகள் அனைவர்க்கும் தெரிந்தவையே.

தீயினுல் ஒளியும், வானினுல் ஒலியும், நீரினுல் சுவையும் மண்ணினுல் நாற்றமும், காற்றினுல் ஊறும் கொண்டு இங்ஙனம் செயல்கள் நடக்கின்றன. இவற்றைச் 'சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்று ஐந்தின் வகை' என்பார் திருவள்ளுவர். இந் நுட்பப் புலன்களால் பருமனுகிய நீர், தீ, காற்று, வானம், மண் என்பன உண்டாக்கப்படுகின்றன. நாவினுல் அவற்றைச் சுவைத்தல் முதலியனவும் நேர்கின்றன.

இவற்றில், சுவை ஒளி ஊறு ஓசை நாற்றம் என்பவை மட்டும் அவ் வப்புலன்களுக்குத்தான் எட்டும். மற்றப் பதினைந்தும் கண்ணுக்குத் தெரியக்கூடியனவே; இவை இருபதும் 'புறக் கருவிகள்' எனப்படும். மற்றவை, உட்கருவிகள். அவையெல்லாம் உள்ளுணர்வினுல் மட்டும் விளங்கக் கூடியவை. 'மனம்' முதலாகத் தொடங்குதலால், அவை யெல்லாவற்றையும் 'மனம்' என்று கூடச் சொல்வதுண்டு, ஏனென்ருல், மனம் எல்லோரும் ஒப்புக் கொள்ளும் உட்கருவி!

'மனம்' 'சித்தம்' 'அகங்காரம்' 'புத்தி' என்னும் நான்கும் அவற்றின் தொடக்கமான உட்கருவிகள். ஆகையால், இந் நான்கையும் முன் சொன்ன இருபதையும் சேர்த்து, 'உயிர்க் கருவிகள்' (ஆன்ம தத்துவங்கள்) எனத் தனியாகப் பிரித்துக் கொள்வதுண்டு. சற்று உற்றுணர்வார்க்கு இவை மட்டும் உணரக் கூடியனவாய் இருக்கின்றன! மேலும், உற்று நோக்குதல் நன்று.

கலைக் கருவிகள் ஏழு வகை; அவை தோன்றும் மாயையும், தோன்றுவதற்குரிய தகுதியை எய்தும் வகையில் மாற்றப்படுவதால், அம் மாயையும் ஒரு கருவியாக எண்ணுவர். மற்ற ஆறில், உயிர் சேர்வதற்குரிய ஒரு கருவியைப் 'புருடன்' அல்லது 'உள்ளம்' என்பர்; அது கொள்ளும் கலைக் கருவிகள் 'காலம்' 'கலை' 'ஒழுங்கு' (நியதி) 'அறிவு' (வித்தை), 'விருப்பு' (அராகம்), ஆகும்.

கலைகள் அழுக்கும் உடையன. அதோடு தூய்மையும் தூய்மையின் நாட்டமும் உண்டு. ஆதலால், இவை தூய்மையும் தூவாமையுமான கலப்பு மாயையில் (மிசிர மாயையில்) அமைந்தன.

முன் சொன்ன பொருட்கருவிகள் இருபத்து நான்கையும் இயக்கும் வகையில் (கலைத் திறத்தை) இவ்வேழும் பொருந்துவதற்குக் காரணம், கலைத் திறத்தால் அன்றித் தொழில்கள் நன்கு அமையமாட்டாவாதலின் என்பது. கலையுணர்வு தொழில்

களின் வகைகளை அறிந்து இயக்கும். இதனைப் பலரும் அறிவர். ஓர் உந்து வண்டியை எடுத்துக்கொள்வோம்; அஃது இயங்கும் வகைகளை அறிந்த கலைஞரே, மற்றத் தொழிலாளரைக் கொண்டு அதனைப் பொருத்தமாகச் செய்து முடிப்பார்; செய்தி தெரியாதவர் எப்படிப் பொருளைச் செய்ய முடியும்?

இனிப் பொருளுலகத்திற் பிறந்து முன்னேறும் உயிர், கலையுணர்வு சிறந்து அதன்பின் தூய்மையுணர்வை (அருளுணர்வை) அடையவேண்டும்.

கலைகள் ஏணி போன்றவை; அழுக்குப் பொருளுலகத்திலிருந்து தூய அருளுலகத்துக்கு ஏற உதவக்கூடியவை. அப்படி ஏறித் தூய மாயையைச் சேர்ந்து, அதனையுங் கடந்து, மிகு தூய்மையாகிய அம்மையப்பரை அடைய வேண்டும். இது செம்மை நிலை எனப்படும். எழுத்தொலி, (நாதம்), அதன் வடிவ ஒளி (விந்து), அவற்றாலான 'ஓம் மறை' (சாதாக்கியம்), அதை இயக்கும் ஆசிரியத் தலைமை (ஈசுரம்), தக்கோர்க்கு அறிவுறுக்கும் நுண்கலையறிவு (சுத்த வித்தை) என இவை ஐந்தும், தூய மாயையின் பிரிவுகள்; தூய மாயை இங்ஙனம் ஐந்து நுண் கருவிப் பிரிவுகளை விளக்கும்; உயிர்களை அவை தூய்மைப் படுத்தும்.

மெய்யறிவும் ஆசிரியத் தலைமையும் மறைத் திறத்துக்கு ஏற்ப அமைந்து, அதற்கேற்ற ஒலியும் ஒளி வடிவும் பெற்று உயர வேண்டியிருக்கிறது. 'மறைத் திறன்' என்றாலும் தூய்மைத் திறன் என்றாலும் ஒன்றுதாம்.

ஆக முப்பத்தாறு கருவிகளையும் உடல் பெற்றிருப்பதோடு, இக் கருவிகளிற் பழகி முன்னேறி, இவற்றைக் கடந்து, உயிர், தன் பண்பாகிய அன்பு வடிவமாகிப் பின்பு அம்மையின் அருள் வண்ணமாய், அதன் பின் செம்மை நிலை என்னும் சிவச் சிறப்பை எய்துதல் வேண்டும்.

'சிறப்பென்னும் செம்பொருள் காண்பது அறிவு' என்னும் திருக்குறள் தொடரை உற்றுற்றுக் காண்க. 'உற்றுற்றுக் காண ஒளிவிடும் மந்திரம்' இவ் வகைகளிலெல்லாம் ஐயமற்ற தெளிவு மக்களுக்கு வேண்டும். சார்புணர்ந்து ஒழுகினால், இம் மெய்யுணர்வுத் தெளிவு தானே பெருகி வரும்.

இனி, இரண்டாம் நூற்பாவின் மூன்றாவது பிரிவைப் பார்ப்போம்.

மூன்றாம் பிரிவு 'போக்கு வரவுபுரிய' என்பது. இதன் பொருள், 'உயிர்கள் இறத்தலும் பிறத்தலும் செய்யும்

பொருட்டு' என்பது. செய்யும் பொருட்டு, இறைவன், ஆணை என்னும் தனது 'சத்தியுடன் பிரிவு தோன்றாதபடி நிற்பான்' என்று நூற்பாக் கருத்துத் தொடர்கிறது.

இக் கருத்திலும் சிலர்க்குச் சில ஐயங்கள் தோன்றுகின்றன.

1. உயிர் பிறக்கிறதா, உடம்பு பிறக்கிறதா?

2. அழித்தலைச் செய்யும் இறைவன் பிறத்தலையும் செய்கிறானா?

3. இறப்பித்தலும் பிறப்பித்தலும் ஆகிய இரண்டு தொழில்கள் இங்கே கூறப்பட்டமையால், காத்தலும் மறைத்தலும் அருளலும் ஆன ஏனைத் தொழில்களைச் செய்வார் யார்?

4. ஐந்தொழிலும் செய்வது இறைவனுக்கு இலக்கணமா?

5. இறந்த உயிர்களே மீண்டும் பிறப்பதுண்டா?

6. 'குடத்திலுள்ள வெளி, புறத்திலுள்ள வெளி, இரண்டும், குடம் உடைந்தால் ஒன்று கலப்பதுபோல, உடம்பின் உள்ளே உள்ள உயிர் உடம்பு உடைந்து நீங்கிய பின், 'எங்கும் பரவிய இறைவனோடு கலந்து விட்டால், திரும்பவும் பிறவிக்கு வராது' என்று பெரியோர் கூறுவது ஏன்?

7. 'பஞ்சாக்கினி வித்தை' என்னும் 'ஐந்தொளித் திறம்' பற்றி ஆன்றோர் கூறுவதன் கருத்தென்ன?

8. உடம்பு நீங்கிய உயிர்களின் நிலை என்ன?

9. இறந்தபின் உயிர்களுக்கு வேறு பற்றுக்கோடு உண்டா? உண்டானால் யாது?

10. அந்தப் பற்றுக்கோடே பிறப்பு என்பது பொருந்துமா?

11. மீண்டும் பிறப்பதனால், முற்பிறவியின் நிகழ்ச்சிகளை உயிர்கள் அறிந்துரைக்க இயலுமா?

12. இறந்துபோன உயிர் பிறப்பதில்லை, வேறு உயிர் தான் பிறக்கின்றது என்றால் என்ன?

13. இந்த இறப்பு பிறப்பிலும் உண்மை கடைப்பிடித்தல் (சற்காரிய வாதம்) உண்டா?

14. உயிர்கள் இறந்தபின் அவற்றில் பற்றுக்கோடு எப்படி இருக்கும்?

15. உயிர்கள் இறந்தபின் அவற்றின் நிலைகள் என்ன?

16. அந் நிலையில் வினைகளின் செயல் முறைகள் எப்படி?

17. உயிர்களுக்கும் புண்ணிய பாவங்கள் உண்டா?

18. அவை இருவினைகளா, அல்லது வேறா?

19. மீண்டும் மீண்டும் பிறப்பதற்குக் காரணம் என்ன?

20. 'கடவுளே உயிர்களும் உலகங்களுமாய்த் தோற்றுகின்றான், மீண்டும் அவனாகவே மாறிவிடுகின்றான்' என்பதனால் உண்டாகும் இழுக்கென்ன?

21. உயிர்களுக்குப் பிறவி ஒன்றுதான்; மறுபிறவி இல்லை என்று சில மதங்கள் கூறுகின்றனவே; அதற்குத் தடைகள் உண்டா?

22. சூக்கும உடம்பு உண்டா?

23. உண்டானால் அது எவற்றால் ஆனவை?

24. தூல உடம்பு எவற்றிலிருந்து தோன்றுகின்றன?

இவ்வாறெல்லாம் ஐயங்கள் எழக்கூடும்; கடவுளே உலகமும் உயிர்களுமாக விளையாடல் புரிகிறது. 'கிரீடாப் பிரமவாதிகள்' (கிரீடை-விளையாட்டு) என்பார்க்கும் அவர் போன்றார்க்கும் இங்ஙனம் நினைவு தோன்றுவதுண்டு.

உயிரின் பொருட்டுச் சிவத்துக்கே மீளப் பிறத்தல் உண்டாகின்றது என்பர் 'சிவாத்துவிதி'கள். மூலப் பகுதியில் தோன்றுகின்ற புத்தியைத்தான் மீளப் பிறப்பதென்று கூறுவது எனச் 'சாங்கியர்' கூறுவர்.

இந்த ஐயங்களை எல்லார்க்கும் நீக்கி வைப்பதற்காகவே சிவஞானபோதம் இரண்டாம் நூற்பாவின் மூன்றாம் பிரிவு தோன்றியது. ஆசிரியர் மெய்கண்டார் கூறும் தெளிவை அனைவரும் அறிந்து கொள்ளுதல் நன்று.

1. ஆசிரியர் இப் பிரிவுக்கு மேற்கோளாக எடுத்துக்கொண்டது 'இவ் வான்மாக்கள் மாறிப் பிறந்து வரும்' என்பது. இதில் ஆன்மாக்களுக்கே இறப்பதும் பிறப்பதும் உண்டாகின்றன என்று அவர் கூறுகின்றார்; உடம்பு அறியாமைப் பொருளாதலின், அது வினை செய்வதென்பதோ, வினைப் பயனை நுகர்வதென்பதோ, ஒருணர்ச்சியும் இல்லாதது; ஒரு முன்னேற்றமுங் கொள்ளாதது; ஆதலால் பிறவிக்கு உரிமையுள்ளது உயிர்தான்; உடம்பு அதன் அடையாளம்!

2. அழித்தலைச் செய்யும் இறைவன் பிறத்தலையும் செய்வான் என்பதை 'அந்தம் ஆதி' என்னும் முதல் நூற்பாவின் மூன்றும் பிரிவில் ஆசிரியர் விளக்கினர். உயிர்க்கு அந்தத்தைச் செய்யும் கடவுளே ஆதியையும் செய்வான் என்பது பொருள். எது எங்கே ஒடுங்குகிறதோ அங்கே இருந்துதான் அது வெளி வரவும் வேண்டும்? வேறு இடத்திலிருந்து எப்படி வரும்?

படைக்குந் தொழிலைச் செய்யும்போது நான்முகத் தேவனை இறைவன் அதற்குப் பொறுப்பாக்கலாம், ஏவல் செய்விக்கலாம். மற்றபடி, படைக்கும் தொழில் ஒடுக்குவோனிடமிருந்தே தோன்றுகின்றது. அவன் எண்ணிஞல் அல்லாமல் யாரும் படைப்பதற்கில்லை. அழிக்கும் பெருமானே படைக்கவும் திருவுள்ளம் பற்றவேண்டும்; பற்றி நான்முகனை ஏவிப் படைப்பிப்பான்; படைத்தவற்றை மீண்டும் ஒடுக்கும் வரையில் காக்கத் திருவுள்ளம் கொள்ளும்போது, திருமாலை ஏவிக் காத்துவரச் செய்வான்; இங்ஙனமே மற்றவையும்;

> "செழும் பொழில்கள் பயந்து காத்து அழிக்கும்
> மற்றை மூவர் கோனுய் நின்ற முதல்வன்"

எனவும்,

> "படைப்போற் படைக்கும் பழையோன்; படைத்தவை
> காப்போற் காக்குங் கடவுள்"

எனவும் வரும் அருள் மொழிகள் காண்க.

3. இரண்டு தொழில்களை ஒருவர் செய்விக்கிருர் என்ருல், அவற்றினும் நுட்பமான ஏனைத் தொழில்களையும் எல்லாம் வல்ல கடவுளே யன்றி வேறு யார் செய்விக்க இயலும்? படைத்தல் தொழிலுக்கு ஒர் அதிதேவர் அமைந்தபடி கடவுளின் ஆணையால் ஏனைத் தொழில்களுக்கும் அதிதேவர்கள் பிறர் திருமால் உருத்திரன் மாகேசன் சதாசிவம் என அமையக் கூடும். எல்லாம் வல்லவராக ஒருவரே இருப்பார். அவர் ஏவலின் வழியே மற்றவர் தொழிற்படுவர். எல்லாம் வல்லவரைத் தெய்வம் என்போம்; மற்றவர்களை உயிர்கள் (தேவர், அதிதேவர்) என்போம். ஒருவர் ஏவலின் வழி மற்றவர் நடந்து கொள்வதே இயற்கை; இருவர் அல்லது ஐவர் தலைவர்களாய் இருப்பது மாட்டாமை.

உடம்புக்குத் தலை ஒன்ருகவே இருக்கும். பல என்பது கற்பனை. பேரவைகளுக்கும் தலைவர் ஒருவரே. நாடுகளுக்கும் வேந்தர் அல்லது ஆட்சித் தலைவர் ஒருவரே. இயற்கைக்கு மாருக வேறு கூறுதல் எப்படிப் பொருந்தும்?

ஆகையால், முழுமுதற் கடவுள் ஒருவரே உலகுயிர்களைப் படைத்தலும் காத்தலும் அழித்தலும் மறைத்தலும் அருளலும் ஆகிய எல்லாத் தொழில்களையும் செய்பவர் ஆவர்.

4. இறைவன் என்றால் ஐந்தொழிலும் செய்பவன் என்று இவ்வாற்றால் பெறப்படுகின்றது. நான்முகனால் காத்தல் தொழில் செய்ய இயலாது. காப்போனால் அழித்தல் இயலாது; அழிக்கும் உருத்திரனால் மறைத்தல் இயலாது. மறைக்கும் மாகேசனால் அருளல் இயலாது. அருளும் சதாசிவனால் ஏனைய தொழில்களும் செய்தல் அருமை. ஐந்தொழிலையும் அறிந்து செய்ய இறைவன் ஒருவனாலேதான் இயலும்.

உயிர்களுக்கு ஐந்தொழில் செய்ய ஆற்றல் தருகிறானென்றால், அது தனித்தனியே செய்யத் தருவதாகும்; அடியார்களுக்கு ஐந்தொழிலும் செய்யத் தருகிறானென்றால், அதுவும் இறைவன் செயலுக்கு உதவியாகவே அமையும்; ஆதலால் ஐந்தொழில் செய்யும் ஆற்றல் இறைவனுக்கே இலக்கணமாய் அமைகிறது. தனது திருவுள்ளக் கருத்தாய் மிகுநுட்பத்தில் ஐந்தொழில்களை உயிர்களுக்குக் கடவுள் இயக்க, உயிர்களைச் சேர்ந்த ஏனை அதிதேவர்கள் அவ்வியக்கப்படி ஏவலராய் எளிய நுட்பத்திலும் தூலத்திலும் செய்து வருவது இயற்கை! ஐந்தொழிலில் அகப்படுவோர் உயிர்கள்; அவற்றைச் செய்வோன் கடவுள் ஒருவனே; ஆதலால் ஐந்தொழில் செய்வது கடவுளுக்கு இலக்கணமாயிற்று.

5. இறக்கும் உயிர்கள் கட்டாயம் மீண்டும் பிறக்கும்.

"பிறந்தாங்கு இறந்தும் இறந்தாங்கு பிறந்தும்"

எனவும்,

"பிறந்தன இறக்கும் இறந்தன பிறக்கும்"

எனவும்,

"தோன்றின மறையும் மறைந்தன தோன்றும்"

எனவும் பட்டினத்தார் கூறுவர்.

இவை பொதுமக்களின் நிலை. உயிர்களில் உயர்ந்தவர்களாகிய தேவர் அதிதேவர்களின் நிலைகளும் ஏறத்தாழ இவை போல்வனவே. அவர்களினும் சிறந்துயர்ந்த அடியார்களின் நிலையோ என்றால், அவர்கள் இறக்க மாட்டார்கள்; மீண்டும் பிறக்கவும் மாட்டார்கள்; பிறந்த உடம்பைத் தாம் விரும்பும் நேரங்களில் அவற்றின் மூலங்களில் மாற்றிவிட்டு வீடு

அடைந்துவிடுவார்கள்; நால்வர் நிலை அவ்வாறே யாயிற்று. மற்ற உயிரினங்கள் எல்லாம் மீண்டும் பிறப்பனவே.

இங்ஙனம் உயிரினங்களில் மீண்டு பிறப்பன மீண்டு பிறவாதன என இருவகை உண்டு.

சதாசிவர் மாகேசர் உருத்திரர் திருமாலர் நான்முகர் முதலியோர் அதிதேவர்களாகிய ஒருவரினும் ஒருவர் உயர்ந்த உயிர்கள்;

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்அசுரராகி முனிவராய்த் தேவராய்"

வரும் எல்லா உயிர்களும் பிறப்பிற்கு உட்பட்டவை. மாணிக்க வாசகப் பெருமானே!

"செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்"

என்பார். தாம் அடியார் ஆவதற்கு முன்னிலையில் நிகழ்ந்தவை இவை. எனென்றால், தாம் முன்பு மனிதராகவும் முனிவராக வும் தேவராகவும் பிறந்து பிறந்து இளைத்துவிட்டதாகக் கூறுகிறார். இந்த உயிரினங்களையும்விட மிகவும் சிறந்துயர்ந்து மேம்பட்டவர் அடியார்கள். அவர்கள் மாணிக்கவாசகர் முதலிய சமய குரவரும் அறுபத்து மூவரில் ஏனையோரும் போல்பவர். இவர்கள் மீளப் பிறவாதவர்கள்.

"மீண்டு வாரா நெறி எனக்கு அருளினன்"

என்பது திருவாசகம்.

இங்ஙனம் மீளப்பிறக்கும் அதிதேவரும், தேவரும், மனித ரும், சிற்றுயிர்களுமாகிய உயிர்கள், மீளப் பிறவாத அடியார்கள் என இருவகைப்படுதலின், அடியார் அல்லாத பிறரெல்லாம் இறந்து மீளவும் பிறக்கும் உயிர்களே என்று துணிந்து கொள்ளவேண்டும்.

6. குடத்தின் வெளி, புறத்தின் வெளியோடு ஒன்று கலத் தல் என்னும் சான்றோர் உரை, மீண்டு வாராத அடியார்கள் நிலையைக் கருதியது. பிறவிதோறும் அதுவரையில் தொடர்ந் திருந்த சூக்கும உடம்பிலிருந்து அடியாருயிர் மீண்டுவாரா நெறியுட் புறப்பட்டுவிடும்; அதற்குரியதே, குடத்து வெளிப் புறத்து வெளியிற் கலந்து விடுதல்.

7. ‘பஞ்சாக்கினி வித்தை’ எனும் ‘ஐந்தொளித் திறம்’ ஐந்து இடங்களின் ஒளியைக் குறித்தது. வேள்வியில் தரும் ஆகுதியை ‘உயிர்’ என்று கூறுவதுண்டு. அது வேள்வியின் வழியே பூதசார உடம்பு வடிவில் மேலுலகம் செல்லும் என்ப; அங்கே புண்ணியங்களை நுகர்ந்தபின், அது மேகமண்டல மழையினூடு நிலத்தில் விழுந்து அங்கு விளையும் விளைவில் உணவு மூலம் தந்தையினிடம் சென்று விந்துவிற் கூடிப், பின் தாயின் கருவிற் பதிந்து குழந்தையாய்ப் பிறக்கும் எனவுங் கூறுப. இங்ஙனம், ‘மேல் உலகம்’ ‘மேகமண்டலம்’ ‘விளைநிலம்’ ‘தந்தையின் விந்து’ ‘தாயின் கரு’ என ஐந்து இடத்திலும் வேள்வியின் ஆகுதியாகிய உயிர் தோன்றி வரும் என்ப. இது, மக்களில் புண்ணியம் செய்யும் நன்மக்களின் பிறப்பு முறை. ஏனை உயிர்களின் பிறப்பு முறை, இந்த ஐந்தொழில் திறம் அல்லாத நிலையிலும் பிறப்பதாகும். அது, வினையின் வகையையும் திருவருட் செயலையும் பொறுத்தது. பொது இயற்கை, தாயின் கருவழிப் பிறத்தல்; ஐந்தொழில் திறமாய்ப் பிறவாமல் அருள் நெறியிற் கிடக்கும் உயிர்களில் ஒன்று நேரே கருவிற் புகுதல்; வேறு முறை இயற்கையில் மிகச் சிறிதாய் நிகழும்.

அது புத்தர் விலாவழிப் பிறந்தார் என்பதும், ஆண்டாள் துளசித் தோட்டத்தில் தோன்றினர் என்பதும் மீனாட்சி வேள்வித் தீயிற் பிறந்தார் என்பதும், இவை போல்வன பிறவுமாகும். இவையெல்லாம் தெய்வத் திருவருள் சேர்ந்த அடியார் நிலையாகும். உலகுக்கு உதவ வந்த பெரியோர் இலர்! சிறிது வினையிருந்தாலும் பற்றற்ற நற்செயல்களின் வழியே அவற்றையும் நீக்கிக் கொள்வர்.

8. தூல உடம்பு நீங்கியபின் உயிர்கள் பழையபடியே சூக்கும உடம்பில் இருக்கும்; வீடுபேறு அடையும் போதுதான் சூக்கும உடம்பும் நீங்கும். அது வரையிற் பல பிறவிகளிலும் சூக்கும உடம்பு அழிவதில்லை.

பிறவி நீங்குதல் என்றால், தூல உடம்பு நீங்குதலே; பிறப்பதென்றால் சூக்கும உடம்போடு உயிர் வேறொரு தூல உடம்பு பெறுதலே.

9. இறந்த பின் உயிர்களுக்குச் சூக்கும உடம்புதான் பற்றுக்கோடு; அந்தச் சூக்கும உடம்பு பிறவியில் தூல உடம்பு என்னும் ‘பூத’ உடம்பாகவும், புண்ணியத்தால் விண்ணுலகத்துக்குச் செல்லும்போது ‘பூதசார’ உடம்பாகவும், பாவத்தால் இருளுலகுக்குச் செல்லும்போது ‘யாதனா’ உடம்பாகவும் காரியப்

படும். அப்படிக் காரியப்படும்போதும் சூக்கும உடம்பு அழியாமல் அவற்றினுள் இருக்கும்.

சூக்கும உடம்புக்கு அச்சு என்றும் வேறு பெயர் உண்டு. ஒரு பிறவியில் யானையாய்ப் பிறக்கலாம். வேறொரு பிறவியில் மனிதராய் வரலாம். இப்படிப் பிறவி உயர்ந்துகொண்டே போகலாம். 'புல்லாகிப் பூடாய் மனிதராய்த் தேவராய் எல்லாப் பிறப்பும்' என்றார் மாணிக்கவாசகர். அப்படி மாறி மாறிப் பூத உடம்பு தோன்றும்போது சூக்கும உடம்பாகிய அச்சு அப் பிறவிகளுக்கேற்றபடி மாறிவரும். இதனை 'அச்சு மாறுதல்' என்று சொல்லுவர்.

சூக்கும உடம்பு என்பது பருமனல்லாத நுட்பமாதலால், அது பரவலாய் விரிதலும் அணுவாய்ச் சுருங்குதலும் அச்சு மாறுதலும் உண்டு. அப்படி வேறு உடம்புகளாக உருக்கொள்ளும்போது சூக்கும உடம்பு அழியவேண்டுமென்பதில்லை. விளக்கிற் காணப்படும் ஒளிப்பிழம்பு நுட்பமானது; அந்தப் பிழம்பிலிருந்து எத்தனை விளக்குகள் ஏற்றினாலும் முன் ஒளிப்பிழம்பு அப்படியே இருக்கும். சூக்குமப் பொருள்களின் இயல்பு இது! நுட்பப் பொருள்கள் ஒன்றிலிருந்து ஒன்று தோன்றும்போது இங்ஙனம் அழியாமை உடையதாய் இருப்பதைப் பார்க்கிறோம். ஆதலால், உயிர்களின் சூக்கும உடம்பு பூமியிற் பிறக்கும் 'பூத' உடம்பாகவும், துறக்க உலகம் செல்லும் 'பூதசார' உடம்பாகவும் இருளுலகம் செல்லும் 'யாதனா' உடம்பாகவும் காரியப்படும் போதும், அச் சூக்கும உடம்பு அழிவதில்லை.

இறந்த உயிர்கள் உடனே துறக்க உலகம் புகுதலும் உண்டு. அதற்குரிய புண்ணியம் நுகர்ந்தபின் இருளுலகம் புகுதலும் உண்டு. அதற்குரிய தீவினை தீர்ந்தபின் பூமியில் வேறு பிறவி எடுப்பதும் உண்டு. அல்லது, இறந்தபின் அப்படியே தேவர்களாகவும் அதிதேவர்களாகவும் உயர்வதும் உண்டு. இறந்தபின் உயிர்களின் நிலை அப்படிப் பலவாகும்.

> "மாறி இவ்வுருவமெல்லாம் வருவது எங்கே நின்று என்னில்
> கூறிய சூக்குமத்து"

எனவும்,

> புரியட்ட ரூபந்தானே யாதனா சரீரமாகி"

எனவும்,

> "உடல்விடா யோனி பற்றி உதிப்பினும் உதிக்கும்; ஒன்றில்
> படர்வுறாது உறும் பாவத்தால் பாடாணம் போல் கிடந்து

கடனதாம் காலம் சென்ருல் கடுநரகதனில் வீழ்ந்து அங்கு
இடர்வுறும் உருவம் கன்மத் தளவினில் எடுக்கும் அன்றே''

எனவும் வரும் சிவஞான சித்தி வாக்குகளால் இவ் வுண்மைகளை அறியலாம்.

சில காலம் பிறவி எடுக்காமல் இருத்தல், விண்ணுலகு சென்று இன்பம் எய்துதல், நரக உலகு சென்று துன்பம் எய்துதல், அல்லது நேரே மேல் போய் உலகுகளுக்கு உயர்ந்து செல்லுதல் அல்லது உடனே உலகிற் பிறத்தல் என்பவற்றில், இருவினை காரணமாகத் திருவருள் நோக்கத்தின்படி சூக்கும உடம்பு எவ்வகைத் தோற்றமேனும் எடுக்கக் கூடும்.

இங்கு ஒரு நினைவு எழலாம். உயர்ந்த பிறவிகளில் இருக்கும் உயிர்கள் தாழ்ந்த பிறவிகளுக்கு வருவது இயற்கையா?

கல்வியில் ஏழாவது வகுப்புக்கு உயர்த்தப்பட்ட ஒருவன் மேல்மேல் எட்டு ஒன்பது பத்து என உயர்ந்த வகுப்புகளுக்குச் செல்லுதலன்ருே முறை? ஆறு ஐந்து நான்காவது வகுப்புகளுக்குக் கீழே போதல் முறையன்றே! அப்படிக் கீழ்நோக்கினுல், முதலில் 7 ஆவது வகுப்புக்கு மாற்றிய ஆசிரியரின் தகுதியின்மையைத் தானே காட்டும்!

மேல் வகுப்புகளுக்கு உயரமாட்டாத மாணவனுனல், படித்த வகுப்பிலேயே பின்னும் ஓராண்டு அல்லது இரண்டு முதலிய ஆண்டுகள் தண்டனையாக நிறுத்தப்படலாமேயன்றிக் கீழ் வகுப்புகளுக்குத் தண்டித்து அனுப்புதல் பெரும்பாலும் வழக்கமில்லையே அப்படியிருக்கும்போது,

''புழுவாய்ப் பிறக்கினும்''

எனவும்,

''இப்பிறவி தப்பினுல் எப்பிறவி வாய்க்குமோ''

எனவும் பெரியோர் வாக்குகள் எழுவது எப்படிப் பொருந்தும்! பிறவி கீழ் நிலக்கும் போவதானுல் அது, உயர்ந்த பிறவியில் உயர்த்திவிட்ட எல்லாம் வல்ல முழுமுதல்வனுக்கும் போதிய முன்னறிவு இல்லாமையையன்ருே காட்டும்!

அங்ஙனமன்று, புழுவாய்ப் பிறக்கினும் என்னும் உம்மை, எதிர்மறையும்மையாய் அங்ஙனம் பிறவாமையையே காட்டிற்று. 'எப்பிறவி வாய்க்குமோ யாது வருமோ' என்றது, ஒரு பிறவியிலேயே பலவகை உயிர்களின் பிறவியையும் குறித்தபடியாகும்.

இன்னென்று : அச்சு மாறிப் பிறத்தல் என்பது, சிற்றுயிர்களாகவோ மனிதர்களாகவோ தேவர்களாகவோ மாறிப் பிறத்தலைக் குறிக்கும். எல்லாப் பிறவிகளிலும் ஆண் பெண் இயைபு

உண்டு. ஆண் பெண்ணாகப் பிறப்பதோ பெண் ஆணாகப் பிறப்பதோ அச்சு மாறுதலன்று.

சேக்கிழார் பெருமான் இறைவன் பொது நடனம் பற்றிக் கூறும்போது, 'தோன்றிய பொருளுமாகிப் பேதியா ஏகமாகி' என்று உலகப் பொருள்களில் இறைவன் 'ஏக'மாகி அங்கங்கும் பொது நடனம் செய்வது பற்றிக் கூறிய பின்பு, 'பெண்ணுமாய் ஆணுமாகி' எனத் தனியே பிரித்துக் கூறினமையும் காண்க. ஆதலால், பெண் ஆணாகவும் ஆண் பெண்ணாகவும் மாறிப் பிறக்கும் என்பது அச்சுமாறுதலன்று இறந்து போதலை அடைகின்ற உயிர்களின் நிலை இவ்வாறெல்லாம் இருக்கின்றன.

10. சூக்கும உடம்பின் பற்றுக்கோடே பிறப்பு ஆகாது. பூத உடம்பாகிய தூல உடம்பை உயிர்கள் மீண்டும் எடுக்கும் போதுதான், அவை பிறக்கின்றன என்பது பொருந்தும்.

11. உயிர்கள் மீண்டும் பிறவி எடுக்கும்போது, முற்பிறவிகளின் நினைவு இருந்தால் வாழ்க்கை பாதிக்குமாதலால் அந் நினைவுகள் மறப்பிக்கப்படுகின்றன; அது 'மாகேசன்' என்னும் அதிதேவரின் பணி; முழுமுதலின் ஏவலால் இது நடைபெறும். இம் மறைப்பைத் 'திரோபவம்' என்றும் சாத்திரங் கூறும்.

நனவில் நடப்பதைக் கனவில் மறப்பதும், கனவில் நடப்பதை நனவில் மறப்பதும், முற்பகல் நடப்பதைப் பிற்பகல் மறப்பதும் எல்லாம் திரோபவச் செயல்களே; அப்படி மறைக்காமல் எல்லாம் நினைவில் இருந்தால், அது புதிய வாழ்க்கைச் செயல்களுக்குத் தடையாகும். ஏதோ இரண்டொன்று நினைப்பு இருப்பது, தப்பி நடைபெறுவது; அது பெரும்பான்மையன்று.

12. பிறப்பது கட்டாயமாய் இருக்கும் முறையில் இறந்த உயிரே மீளப்பிறக்கும் என்பதே முறை, கட்டாயமற்று உயரும்போதுதான் அதிதேவர்களாகவோ அடியார்களாகவோ உயர்ந்து பிறவியறும்.

உடம்பு அறியாமைப் பொருளாதலால், பிறவியால் அது பெறும் பேறோ, உணர்ச்சியோ ஒன்றுமில்லை. உயிர்களோ என்றால், ஒவ்வொரு பிறவியினாலும் உணர்ச்சி மிகுந்து முன்னேற வேண்டியிருத்தலின், உயிர்களில், இறந்த உயிரே மீளப் பிறப்பதுதான் இயல்பு. ஓரறிவு உயிராயிருப்பது ஈரறிவு மூவறிவு முதலிய பேரறிவுகளைப் பெற வேண்டியிருத்தலை நினைவுகூர்க. பிறவியில் உயிர்களுக்கு உடம்பு அடையாளமாய் இருக்கிறது. அவ்வுடலை ஏற்றுப் பிறக்கும் உரிமை உயிர்க்குத்தான் உண்டு.

(தொடரும்)

உயிர்மெய்ம்முதல் வேர்ச்சொற்கள்

[ஞா. தேவநேயன்]

விள்[2]—வெம்மை யொண்மை வெண்மை வெறுமைக் கருத்து வேர்ச்சொல் (தொடர்ச்சி)

சினம் தீப்போன்றது. ஆதலாற் சினக் கருத்து வெம்மை யினின்று தோன்றும் கிளைக் கருத்தாகும். ''சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி'' (குறள். 306) என்று திருவள்ளுவர் கூறுதல் காண்க.

1. சினக்கருத்து:

விள் — விளம் = கடுஞ்சினம். விருந்திற்குத் தன்னை யழைக்க வில்லையென்று விளமெடுத்துத் திரிகின்றான். (உ. வ.)

விளம்—விளர் = பெருஞ்சினம் (அரு. நி.).

விள்—விளி. விளிதல் = சினத்தல். ''விளிந்தாரே போலப் பிறராகி'' (பழமொ. 182).

விளர்—வியர். வியர்த்தல் = சினங்கொள்ளுதல் (பிங்.).

வியர்—வியர்ப்பு = 1. சினம், சினக்குறிப்பு (திவா.).

வியர் —வியர்வை = சினக்குறிப்பு (பிங்).

வியர்—வெயர். வெயர்த்தல் = சினங்கொள்ளுதல்.

வெயர்—வெயர்ப்பு = சினம். ''வெஞ்சமம் விளைத்தன வியர்ப்பால்'' (இரகு. திக்குவி. 112).

வெயர்—வேர். வேர்த்தல் = சினத்தல். ''பாலன்மேல் வேர்ப்பது செய்த வெங்கூற்று'' (தேவா. 82 : 7).

வேர் = சினம். (W.).

வெம்மை = சினம். ''வேக யானை வெம்மையிற் கைக் கொள'' (சிலப். 15 : 47).

வெப்பு = சினம். ''வெப்புடைக் கொடிய மன்னன்'' (கம்பரா மிதிலைக். 99).

வெப்பு—வெப்பம் = சினம்.

வேதல் = சினமுறுதல். ''கட்டூர் நாப்பண் வெந்து வாய் மடித்து'' (புறநா. 295).

வே—வேகு—வேகம்=சினம். "ஓவா வேகமோ டுருத்து" (கலித். 103).

வேகு—வேகி. வேகித்தல்=சினத்தல். ''சம்பரன் வேகித்து ......வதஞ் செய்வான்'' (ஞானவா. பீம. 16).

வேகி=சினத்தன். வேகியானுற் போற் செய்த வினையினை வீட்டலோரார் (சி. சி. 1 : 50).

வேகு—வெகுள். வெகுள்தல்=சினத்தல். "வேர்த்து வெகுளார் விழுமியோர்" (நாலடி. 64).

வெகுள்—வெகுளி=சினம். குணமென்னுங் குன்றேறி நின்ருர் வெகுளி (குறள். 29).

வே—வேந்து—வெந்தி. வெந்தித்தல் = சினங்கொள்ளு தல். ''வெந்திப்புடன்வரு மவுணேசனையே'' (திருப்பு. 136).

வெந்து—வெஞ்சு—வெஞ்சன்=சினம். (யாழ். அக.).

2. ஒண்மைக் கருத்து :

ஒண்மை ஒளிர்வு. விள்ளுதல்=தெளிவாதல்.

விள்—விள—விளங்கு. விளங்குதல்=(செ. கு. வி.).

1. பளபளப் பாதல். 2. ஒளிர்தல், திகழ்தல். ''பகல்விளங் குதியாற் பல்கதிர் விரித்தே'' (புறநா. 8). 3. பெயர் அல்லது புகழ் பரவுதல். அவன் பெயர் எங்கும் விளங்கும். (உ. வ.). 4. தெளிவாதல். "சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்" (நன். 13). 5. தழைத்தல். அந்தக்குடி விளங்கவில்லை. 6. மேம் படுதல். ''திறல் விளங்கு தேர்த்தானை'' (பு. வெ. 4 : 8). (செ. குன்ருவி.) அறிதல் (யாழ்ப்.).

ம. விளங்ஙு(க) தெ. வெலுங்கு. க. பெளகு (belagu).

விளங்கு—விளக்கு. விளக்குதல்=1. தெளிவாக்குதல். ''சொல்லிக் காட்டிச் சோர்வின்றி விளக்கி'' (மலைபடு. 79). 2. பெயர் பரவச் செய்தல். ''தம்மை விளக்குமால்'' (நாலடி. 132). 3. துலக்குதல். பல்லை விளக்குகிருன். கலங்களைக் காலை யில் வேலைக்காரி விளக்குவாள். 4. வீட்டைப் பெருக்கித் துப்புர வாக்குதல். விளக்குமாறு. 5. மாழையைப் பொடியிட்டுப் பற்ற வைத்தல். ''பொன்னின் பட்டைமேற் குண்டுவைத்து விளக்கின வனை'' (S. I. I. ii, 182). 6. உண்டி பரிமாறுதல். ''அட்டன யாவையும் விளக்கின மிவர்க்கே'' (விநாயகபு. 53 : 29).

விளக்கு—விளக்கணம்=பொடி வைத்துப் பொருத்துகை. (யாழ். அக).

விளக்கு=1. தீவம். ''எல்லா விளக்கும் விளக்கல்ல'' (குறள். 299). 2. ஒளி, ஒளிப்பிழம்பு. (அக. நி.). 3. துலக்கம் பெறச் செய்கை. ''நிலம் விளக்குறுப்ப'' (மதுரைக். 705). 4. பதினேந்தாம் நாண்மீன் (சோதி).

''விளக்கே மரக்கால் வெறுநுகம் வீழ்க்கை
துளக்கங் காற்றி ஞளே சோதி'' (பிங். 2 : 161)

ம. விளக்கு, தெ. வெலுகு (g), க. பெளக்கு (b).

விளக்கு—விளக்கம்=1. ஒளி. ''ஊர்சுடு விளக்கத்து'' (புறநா. 7). 2. திங்கட் கலை. (சது.). 3. விளக்கு. ''குடியென்னும் குன்ரு விளக்கம்'' (குறள். 601). 4. இயங்கும் மோதிரம். ''செவ்விரற் கொளீஇய செங்கேழ் விளக்கத்து'' (நெடுநல். 144). 5. தெளிவாக்குகை. 6. தெளிவான பொருள். 7. தெளிவு. நீ சொல்வது அவ்வளவு விளக்கமாக இல்லை. 8. புகழ். ''தாவில் விளக்கந்தரும்'' (குறள். 853). 9. கேள்வி (விசாரணை). (யாழ். அக.). 10. கேள்வி நடைபெறும் வழக்கு மன்றம். (புதுவை.). 11. மிகுதி. விளக்கமாய்க் கொடு. (திருநெல்).

விள்—விள—விளத்து. விளத்துதல்=விளக்கமாகக் கூறுபடுத்திச் சொல்லுதல் (விவரித்தல்).

விளத்து—விளத்தம்=விளக்கம்.

விள்—வெள்=ஒளிபொருந்திய. ''வெள்வேல் விடலை'' (அகநா. 7). ''வெள்வாள் வேந்தன்'' (பு. வெ. 8 : 27, கொளு).

வெள்ளெனல்=தெளிவாதல். ''வெள்ளென நோவா தோன்வயிற் றிரங்கி'' (புறநா. 207).

வெள்—வெள்ளை=விளக்கம், தெளிவு. இறப்பாட்டு வெள்ளையாயிருக்கிறது.

வெள்—வெளி. வெளித்தல்=தெளிவாதல். (யாழ்ப்).

வெளி—வெளிச்சம்=1. ஒளி. 2. விளக்கு. அந்த இருட்டறைக்கு ஒரு வெளிச்சம் கொண்டுவா. 3. தெளிவு. 4. பகட்டு. வெளிச்சம் போடுதல்.

வெளி—வெளிச்சி=இரவில் ஒளிர்வதாகச் சொல்லப்படும் மரம்.

வெளி—வெளிறு=வெளிச்சம், ''கதிர்வேறுணையா வெளிறுவிரல் வருதி கண்டாய்'' (பதினெ. திருவாரூர்மும். 9).

வெள்—வெட்டு. வெட்டுதல்=பளிச்செனல், மின்னுதல். மின்னல் வெட்டுகிறது, காலில் மிஞ்சி வெட்டுகிறது.

வெட்டு—வெட்டம்=வெளிச்சம். (நாஞ்.).

ம. வெட்டம். ஒ.நோ. Gk. *Photos*, light.

வெட்ட=1. தெளிவான (W.). 2. அதிகமான.

வெட்ட வெளிச்சம்=1. மிகுந்த ஒளி. 2. மிகத் தெளிவு. 3. வெளிப்படை. அந்தக் கொலைச்செய்தி வெட்ட வெளிச்சமாகி விட்டது.

விள்—விளி—விடி. விடிதல்=1. காலையில் இருள் நீங்கி ஒளி தோன்றுதல். 2. கதிரவன் தோன்றி ஒளி பரவுதல். "வெஞ்சுடர் தோன்றி விடிந்ததை யன்றே" (சீவக. 219). 3. துன்பம் நீங்கி யின்பமாதல். "நிற்பயம் பாடி விடிவுற்றேமாக்க" (பரிபா. 7 : 85). 4. ஒரு வினைமுயற்சி அல்லது வழிநடை முடிதல். "வழிநடப்ப தென்று விடியுமெமக் கெங்கோவே" (தனிப்பா. i. 212 : 5).

விடி=விடிகாலை. "விடிபக லிரவென் றறிவரிதாய்" (திவ். பெரியதி. 4 : 10 : 8).

விடிகாலை=விடிகின்ற நேரம்.

விடி—விடியல்=விடிகாலை. "வைகுறு விடியன் மருதம்" (தொல். அகத். 8).

விடியங்காட்டி=விடிகாலை. தம்பி இன்று விடியங்காட்டி வந்தான். (உ. வ.) 'காட்டில்' என்பது ஓர் உறழ்தர வுருபு (Sign of Comparative degree) அது உலக வழக்கிற் காட்டி என்று திரிந்து, காலப் பொருளில் வழங்கும்போது உறழ்தரத்தை மட்டுமன்றி ஒப்புத் தரத்தையும் (Positve degree) குறிக்கும்.

இனி, விடியல்காட்டி—விடியங்காட்டி என்று கொள்ளவும் இடமுண்டு. இதில், 'காட்டி' என்பது உறழ்தர வுருபல்லாத இறந்தகால வினையெச்சம்.

'காட்டில்' என்னும் உறழ்தர வுருபு 'காட்டிலும்' என்று 'உம்' ஏற்கவுஞ் செய்யும். அது உலக வழக்கில் 'காட்டியும்' என்று திரியும்.

விடியற்கருக்கல்=(விடியும் பொழுதுள்ள இருட்டு), விடியற் காலம், விடியா மூஞ்சி, விடியா வழக்கு, விடியா விளக்கு (நந்தா விளக்கு, "விடியா விளக்கென்று மேவி நின்றேனே" திருமந். 48), விடியா வீடு, விடிவிளக்கு (விடியும் வரை எரிவது), விடிவெள்ளி, விடிவேலை என்பன பெருவழக்கான கூட்டுச் சொற்கள்.

விடி—விடிவு=1. விடிகாலை. "விடபியிதன்கண் விடி வளவு மிருவே மிருத்தும்" (சேதுபு. தரும. 13). 2. துன்பம் நீங்கியின்பம் வருகை. "நிற்பயம் பாடி விடிவுற் றேமாக்க" (பரிபா. 7 : 85). 3. ஒழிவு வேளை.

க. பிடவு (b).

விடி—விடிவை=விடியற்காலம். "விடிவைசங் கொலிக்கும்" (திவ். திருவாய். 6 : 1 : 9).

விடியவிடிய=இராமுழுதும்.

விள்—வெள். வெள்ளெனல் காட்டி—வெள்ளங் காட்டி= விடியற்காலையில். ஒ. நோ: விடியங்காட்டி. வெள்ளென= விடிந்தவுடன் நாளை வெள்ளென வா. (உ. வ.)

வெள்—வெளு. வெளுத்தல்=1. வெற்றிலை மென்றபின் உதடு சிவந்து தோன்றுதல். 2. உண்மை வெளிப்படுதல். 3. புகழ் விளங்குதல்.

3. வெண்மைக் கருத்து

விள்—விள=வெண்டோடுடைய பழம், அப்பழமரம்.

விள—விளம். விள—விளா=விளாம்பழம், விளாமரம்.

விளா—விளவு (பிங்.) விளவு—விளவம்..

விளா—விளாத்தி (மலை.). விள்—வெள்—வெள்ளில்= விளா. வெள்—வெள்ளியம்=விளா.

விளவம் — விலவம் — வில்வம் = விளாவை யொத்த கூவிளம்.

வில்வம்—வில்லம். "வடிவுடை வில்லம்" (திருமந். 1720)

வில்வ—வ. வில்வ, பில்வ.

விள்—விளர்—வியர்—வேர்=1. நிலத்தின் கீழ் வெளுத் துள்ள மரவடி யுறுப்பு. 2. திரண்ட வேரான கிழங்கு. 3. சொல்லின் அடிப்பகுதி. வேர்ச்சொல் அகரமுதலி. 4. மூலம். 5. காரணம்.

விள்—வெள்=வெண்மையான. "வெள்ளரைக் கொளிஇ" (மலைபடு. 562.) வெள்ளணி, வெண்குடை, வெண்டாமரை, வெண்ணெல்.

க. பிள் (b).

வெள்—வெள்ளம்=1. வெண்ணிறமான அல்லது வெளி றின புது நீர்ப் பெருக்கு. "வெள்ளந்தாழ் விரிசடையாய்"

(திருவாச. 3 : 1). 2. கடல். (பிங்.) "மசர வெள்ளத் திறுத்த தால்" (கம்பரா. கடல்காண். 2). 3, கடலலை. (பிங்.) 4. நீர் "வெள்ளத் தனைய மலர் நீட்டம்" (குறள். 595). 5. ஈரம். (பிங்.) 6. மிகுதி. (சூடா.) 7. ஒரு பேரெண். (பிங்.)

"ஐஅம் பல்என வருஉம் இறுதி
அல்பெயர் எண்ணினும் ஆயியல் நிலையும்."

(தொல். புள்ளி. 98). 8.

ம., து. வெள்ளம், தெ. வெள்ளி,

க. பெள்ள (b).

வெள்ளன் = வெண்ணிறத்தான்.

வெள்ளாடு = வெண்ணிற ஆடு, அதே யினமான காராடு, செவ்வாடு.

வெள்ளாளன் = வெண்களமன், வெளிறின பொன்னிறத் தானன உழுவித்துண்ணும் வேளாளன், உயர் வேளாளன், காராளன் என்பதற்கு எதிர்.

வெள்ளான் = வெள்ளாளன்.

வெள்—வெள்ளி = 1. வெண்மை. "வெள்ளி நோன் படை" (புறநா. 41). 2. வெண்மாழை (உலோகம்). "விண் ணகு வெள்ளி வெற்பின்" (சீவக. 1646). 3. வெள்ளிக்காசு. இதன்விலை முப்பது வெள்ளி (கீழ்நாட்டு வழக்கு). 4. உடு (நட்சத்திரம்). வெள்ளி முளைத்து விட்டது. 5. விடிவெள்ளி. "இலையிலிட வெள்ளியெழும்" (காளமுகில்). 6. வெள்ளிக் கோள் (சுக்கிரன்). "இலங்குகதிர் வெள்ளி தென்புலம் படரி னும்" (புறநா. 35). 7. வெள்ளிக்கிழமை. "வெள்ளி வாரத்து" (சிலப். 23 : 135). 8. கம்பராமாயணம் பெரியபுராணம் முதலிய பழம் பனுவல்களில் தம் சொந்தப் பாட்டுக்களை இடைச்செரு கிய தருமபுர மடத்தம்பிரான். இது வெள்ளிபாடல். (உ. வ.). 9. வெள்வரை. "வெறுநாய் சந்தைக்குப் போனுல் வெள்ளிக் கோலால் அடிபட்டு வரும்." (பழ.) 10, விந்து. "வெள்ளி யுருகியே பொன்வழி யோடாமே" (திருமந். 834).

வெள் — வெளி — வெளில் = முதுகில் வெண்கோடுள்ள அணில். "வெளிலாடுங் கழைவளர் நனந்தலை" (அகநா. 109).

வெளி—வெளிச்சி = வெண்ணிறக் கெண்டைமீன்.

வெளிச்சி—வெளிச்சை. "வெளிச்சை மீறும்" (அழகர் கல. 86).

வெளி—வெளிர்—வெளிறு. வெளிறுதல் = 1. வெண்மை யாதல். 2. சற்றே வெளுத்தல். வெளிறு = வெண்மை. "வெளிறுசேர் நிணம்" (கம்பரா. கரன். 155).

வெள்—வெளு. வெளுத்தல் = (செ. கு. வி.) 1. வெண்மை யாதல். 2. சாயம் போதல். அந்தப் புடவை வெளுத்து விட்டது. 3. விடியுமுன் கிழக்கில் வானம் இருள் நீங்குதல். கிழக்கு வெளுத்து விட்டது. 4. முகக்களை கெடுதல்.

(செ. குன்றுவி.) 1. ஆடை யொலித்துப் பெரும்பாலும் வெண்ணிறமாக்குதல். 2. ஆடையொலித்தல் போற் புடைத் தல். 3. எதிரியைத் தோற்கடித்தல் (கொ. வ.). 4. திறம் படச் சொற்பொழிவாற்றுதல் அல்லது வினைசெய்தல். (கொ. வ.).

வெளு—வெளுப்பு = 1. வெண்மை. 2. நோயால் உடல் வெளிறுகை. 3. ஆடை தப்புகை. 4. புடைக்கை.

வெளுப்பு—வெளுப்பம் = வெண்மையாகை, வெளிறுகை.

வெளு—வெளுவை = வெண்மையாகை. (யாழ். அக.)

வெள்—வெளேல்—வெளேர். வெளேரெனல் = வெண்மை யாதற் குறிப்பு.

வெள் — வெள்ளை = 1. வெண்மை. "வெள்ளை வெள் யாட்டுச் செச்சை" (புறநா. 286). 2. வெள்ளாடை. 3. வெளுப்பு, சலவை. "கோடிச் சேலைக்கு ஒரு வெள்ளை, குமரிப் பெண்ணுக்கு ஒரு பிள்ளை." (பழ.) 4. சுண்ணம்பு. வீட்டிற்கு வெள்ளையடிக்க வேண்டும். "வேண்டாதவனிடத் திலும் வெள்ளை வாங்கலாம்." (பழ.) 5. சுண்ணம்பு பால் மோர் என்னும் மூவெண் பண்டங்கள். 6. வெள்ளிக்காசு. "வெள்ளை வெள்ளை யென்பார்கள் மேதினியோர்" (பணவிடு. 341). 7. வெள்ளீயம். (W.) 8. வயிரம். இது நல்ல வெள்ளை. 9. பச்சைக்கற் குற்றம் எட்டனுள் ஒன்று. (சிலப். 14 : 184, உரை). 10. சங்கு. (ஈடு, 6 : 1 : 5 அரும்.). 11. வெள்ளை மாடு. "பானிற வண்ணன் போற் பழிதீர்ந்த வெள்ளை" (கலித். 104). 12. வெள்ளையாடு. 13. வெள்ளாட்டினமான காராடு, செவ்வாடு. "துருவை வெள்ளையொடு விரைஇ" (மலை படு. 414). 14. பலராமன். "மேழி வலனுயர்த்த வெள்ளை" (சிலப். 14 : 9). 15. வெண்ணெல். 16. சம்பா நெல்வகை. (G. Tu. D. I. 153). 16. பனங்கள். (பிங்.). 17. விந்து. 18. வெட்டைநோய். 19. வெள்ளைக் கனிய நஞ்சு. (மூ. அ.)

20. வெண்முகில். "வெள்ளை மழையென்றே விளம்பு. (சினேந். 4 : 21). 21. வெள்ளைக் கொடி, வெள்ளை காட்டுதல். 22. வெண் புள்ளி. ஐந்துகிரிலும் வெள்ளை போட்டிருக்கிறது. 23. வெளிப்படை, தெளிவு. இந்தப் பாட்டு (பாட்டின் பொருள்) வெள்ளை.

ம., தெ. வெள்ள. வெள்ளைக்காரன் = வெள்ளை நிறத்தான், மேனாட்டான்.

வெள்ளெக்கல் = நன்றாக வுண்டு செழிப்பாகவும் வெண்ணிறமாகவும் உள்ள உறவினர்.

வெள்—வெள்கு. வெள்குதல் = 1. முகம் வெளிறுதல், நாணமடைதல். "வெள்கிட மகுடஞ் சாய்க்கும்" (கம்பரா. வாலிவதை 73). 2. கூச்சப் படுதல். "தான்றன் வென்றியை யுரைப்ப வெள்கி" (கம்பரா. திருவடி. 9) 3. அஞ்சுதல். "வெந்தனகள் கொண்டெறிய வெள்கிம் மயிர்க் கவரிமா விரியுமே" (சீவக. 1897). 4. மனங்குலைதல். (பிங்.) க. பெள்கு.

வெள்கு—வெட்கு. வெட்குதல் = 1. நாணுதல். 2. கூச்சப்படுதல். 3. அஞ்சுதல். (W.)

வெட்கு—வெட்கம் = 1. மானக்கேடு. (சூடா.) "வெட்கத்துக் காளினி நானே" (இராமநா. யுத்த. 32). 2. கூச்சம்.

வெள் — வேள் — வேளம் — வேழம் = 1. வெண்கரும்பு. 2. பேய்க் கரும்பு 3. நாணல். 4. கொறுக்காந்தட்டை. 5. வெள்யானை, யானை.

தூய்மைக் கருத்து

இது வெண்மையினின்று தோன்றிய கிளைக்கருத்தாகும். கருமையைக் குறிக்கும் களங்கம் கரிசு கன்ற முதலிய சொற்கள் குற்றத்தை யுணர்த்துவது போன்று, கருமைக் கெதிரான வெண்மையைக் குறிக்குஞ் சொல் குற்றமின்மையை அல்லது தூய்மையை உணர்த்திற்று.

வெள்ளம் = உண்மை. இது கள்ளமா வெள்ளமா (W.).

வெள்ளர் = கரவற்றவர். "கள்ளரோ புகுந்தீரென்ன...... வெள்ளரோ மென்று நின்றார் (தேவா. 1190 : 9).

வெள்ளந்தி = கள்ளங் கரவற்ற தன்மை, அத் தன்மையன்.

வெள்ளை = கள்ளங் கரவற்ற—வன்—வள்—து. "வெள்ளைக் கில்லை கள்ளச் சிந்தை" (கொ. வே. 87).

வெண்பா = பிறதனை கலவாத தூய பா.

4. விளைவின்மைக் கருத்து

முதிர்ந்து வயிரம் பாய்ந்த மரம் பொதுவாகக் கருத்தும், விளையாத மரம் வெளிறியும், இருப்பதனுல், வெண்மைக் கருத்தினின்று.

வெள்ளை = 1. விளையாத மரம். ''வெள்ளை சொட்டை, (சூளவ) கருப்பு வயிரம்'' (பழ.). 2. கருத்தாழமின்மை. ''நாவினில் விளையு மாற்ற நின்றிரு வடிவினு மிகவெள்ளையாகியது'' (பாரத. உலூகன். 4). 3. அறிவில்லாதவன்.

வெளிறு = 1. இளமை. ''வெளிற்றுப் பனந்துணியின்'' (புறநா. 35). 2. திண்மை யற்றது. ''வெளிருன இருளன்றிக்கே'' (ஈடு, 2 : 1 : 8). 3. வயிரமின்மை. ''வெளிறினேன் காழ்'' (புறநா. 23). 4. வெளிற்றுமரம். ''வெளிறுமுன் வித்திப் பின்னை வச்சிரம் விளைத்தலாமோ'' (சீவக. 2613). 5. அறிவின்மை.

''அரியகற் ருசற்ருர் கண்ணுந் தெரியுங்கால்
இன்மை யரிதே வெளிறு''   (குறள். 503)

6. பயனின்மை. ''வெளிற்றுரை விடுமி னென்ருன்'' (சீவக. 1431). 7. குற்றம். ''வெளிறில் வாள்'' (சீவக. 3074).

(உயிர்மெய்ம் முதல் வேற்சொற் கட்டுரை முற்றும்)

பாவாணர் கட்டுரை

செல்வியில் தொடர்ந்து வெளிவந்துகொண்டிருந்த மொழிநூல் மூதறிஞர் திருமிகு தேவநேயப் பாவாணர் அவர்களின் 31 கட்டுரைகள் அடங்கிய 'வேர்ச்சொல் கட்டுரைகள்' என்னும் தனிநூல் முன்னர்க் கழகவழி வெளியிடப்பட்டுள்ளது. அடுத்து வெளிவந்தனவான 37 கட்டுரைகள் அடங்கியநூல் விரைவில் வெளிவரவிருக்கின்றது.

இனி அடுத்த இதழ்முதல் பாவாணர் அவர்கள் எழுதும் 'தமிழின் தலைமை நாட்டும் தனிச்சொற்கள்' என்னும் கட்டுரைத் தொடர் செல்வியில் இடம்பெறும்.

— ஆசிரியர்,

சங்க இலக்கியத்தில் மணிகள்

[திரு. பி. எல். சாமி, பி.எசி.]

(பரல் ௯ பக்கம் ௪௫௮இன் தொடர்ச்சி)

திரு. ஐயங்கார் அவர்களும் கவாடம் என்பது அலைவாய் என்ற தமிழ்ப்பெயரில் உள்ள வாய் என்ற சொல்லின் மொழி பெயர்ப்பே என்பதை உணரவில்லை. வாய், வாயில் என்ற சொற்கள் சங்ககாலத்திலேயே ஊர்களுக்கு வழங்கியுள்ளன. கடம்பின் வாயில் என்பது கடம்பர் வாழ்ந்த தென்கன்னடப் பகுதிக்குப் புகுமுகமாக இருந்த ஊரின் பெயராகச் சங்கநூல் கூறியதைக் கவனிக்க வேண்டும். 'காண்ட வாயில்' என்ற ஊரும் சங்கநூல்களில் வருகின்றது. ஆதலின் அலைவாய் என்ற பாண்டியருக்கு உரிய கடற்கரைத் தலைநகரப் பட்டினத்தையே வடமொழியில் பாண்டிய கவாடம் என்று கௌடில்யரும் வால்மீகியும் மொழிபெயர்த்துக் கூறினர் என்பதில் ஐயமே யில்லை. ஆதலின் பாண்டிய கவாடத்தில் விளைந்த முத்து பண்டைய் பாண்டியரின் அலைவாயில் பிறந்த முத்து ஆகும். மெகஸ்தனீஸ் காலத்திற்கு முன்னர் அலைவாயைப் பாண்டிய கவாடம் என்றும் அலைவாய் அழிந்து கொற்கைத் துறை தோன்றிய சங்ககாலத்தில் வடமொழியாளர் கொற்கை முத்தையும் பழைய பெயரால் அழைத்திருக்கலாம் என்பதில் ஐயமில்லை. ஆனால், தாம்ரபர்ணிகம் கொற்கை முத்து என்று இராகவையங்கார் எழுதியதோ அதையொட்டி மயிலை சீனி வேங்கடசாமி அவர்கள் எழுதியதோ ஒப்புக்கொள்ளத்தக்க செய்தியாக இல்லை.

தாம்ரபர்ணிகம் என்ற வடமொழி வழக்கு சங்ககாலத்தில் தமிழில் வழங்கவே யில்லை. தேவார காலத்திலும் வழங்கவில்லை. ஆனால், வடமொழியிலும் பாலி மொழியிலும் சங்ககாலத்திலும் அதற்கு முன்னரும் தாம்ரபர்ணிகம் இலங்கையைக் குறித்து வழங்கியுள்ளது. மெகஸ்தனீஸ் கி. மு. மூன்றும் நூற்றூண்டில் இலங்கை நாட்டை இந்தப் பெயரால் குறிப்பிட்டுள்ளார். அதற்குப் பின்னர் பௌத்த நூல்களில் தம்மப்பன்னி என்றே இலங்கைநாடு குறிப்பிடப்பட்டுள்ளது. கிறித்துவுக்கு முன்னரே பாலி மொழியில் இலங்கைத் தீவு தம்மப்பன்னி என்ற பெயரில் குறிப்பிடப்பட்டுள்ளது. தாமிரபர்ணி என்ற பெயரின் பாலி மொழி வழக்கே தம்மப்பன்னி என்பதாகும். ஆதலின் தாம்ரபர்ணிகம் என்ற முத்து இலங்கை முத்து என்

பதில் ஐயமே யில்லை. அதற்கேற்ப கிரேக்க, உரோம வரலாற்றுச் செய்திகளும் அறிவியல் செய்திகளும் தெளிவாகத் தாம்ரபர்ணிகம் என்ற முத்து இலங்கைக் கடற்கரையில் பாக் சலசந்தியில் (Palk Straits) கிடைத்த முத்தையே குறித்தன என்பதை உணர வேண்டும்.

சங்ககாலத்திலும் பிற்காலத்தில் இராசராசன், இராசேந்திரன் முதலிய சோழப் பேரரசர் காலத்திலும் இரண்டே இடங்களில்தான் முத்து விளைந்தது என்பதற்கு அறிவியல், வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. பாண்டிய நாட்டிற்கு அருகில் இருந்த மன்னுர்வளைகுடாவிலும் இலங்கை நாட்டிற்கு அருகில் இருந்த பாக் சலசந்தியிலும் முத்து விளைந்ததாகப் பண்டை கிரேக்க, உரோம ஆசிரியர்கள் கூறியுள்ளனர். ஆதலின், பாண்டிய நாட்டில் கி. மு. பல நூற்ருண்டுகளுக்கு முன்னரே அலைவாய்ப் பட்டினத்தில் முத்து விளைந்தது. அந்த முத்தே பாண்டிகவாடம் என்றழைக்கப்பட்டது. பின்னர்க் கொற்கையில் விளைந்த முத்தும் அதே பெயரால் அழைக்கப்பட்டது. தாம்ரபர்ணிக என்ற முத்து இலங்கைக் கடற்கரையில் அகப்பட்டது. இந்த முத்து 'தாம்ரபர்ணிகம்' என்று அழைக்கப்பட்டது. இதை உணராது இது கொற்கை முத்து என்று கூறினர். தாமிரபர்ணி என்று தமிழ் நாட்டு ஆற்றைக் குறிப்பிட்டது மிகப் பிற்கால வழக்காகும். இதன் பண்டைப் பெயர் தண்பொருநை என்பதாகும். இந்த ஆறு கடலில் கலக்குமிடத்தில் கொற்கை இருந்தது. தாமிரபர்ணி என்ற ஆற்றின் பிற்காலப் பெயரை வைத்துக்கொண்டு வால்மீகி கூறிய தாம்ரபர்ணிகம் என்ற முத்தின் பெயர் தாம்ரபர்ணி ஆறு கடலில் கலக்கும் ஊரான கொற்கை முத்து என்று கூறினர்.

சங்ககாலத்திலேயே கரிகாற் சோழன் ஈழநாட்டை வென்று ஈழநாட்டுக் குடிகளை அடிமைகளாக்கி, காவிரிக் கரையை உயர்த்திஞன் என்று கூறப்படும் மரபுச் செய்தியையும் கவனிக்க வேண்டும். வரலாற்று அறிஞர்கள் கரிகாலன் காலத்திலேயே ஈழநாட்டு வடக்குப் பகுதி சோழ அரசாட்சிக்கு உட்பட்டிருந்தது என்று கூறியிருக்கின்றனர். சோழர்கள் சங்ககாலத்திலும், இராசராசன், இராசேந்திர சோழன் காலத்திலும் இலங்கை நாட்டைத் தங்களாட்சிக்குள் வைத்துக்கொள்ளப் போரிட்டதற்கு முக்கியமான காரணம் ஈழநாட்டுக் கடற்கரையில் (Palk Straits) விளைந்த முத்தின் விலை மதிப்பே என்பதை வரலாற்று அறிஞர்கள் சிலர் கூறியுள்ளனர். மேலைநாட்டில் முத்தை விற்றுப் பெரும்பொருள் பெறுவதற்காகவே சோழ மன்னர்கள் ஈழநாட்டு வடக்குப் பகுதியைத் தங்கள் ஆளுகைக்கு உட்

படுத்துவதில் முனைந்து நின்றனர். அறிவியல் அடிப்படையாக வும் வெளிநாட்டு வரலாற்றுச் செய்திகளின் அடிப்படையாகவும் பார்க்கும்போது சங்ககாலத்தில் முத்து பாண்டிய நாட்டுக் கடற் கரைக்கு அருகிலும் ஈழநாட்டு வட கடற்கரையின் அருகிலுமே விளைந்தது என்பதில் ஐயமே யில்லை.

சேரநாட்டுக் கடற்கரை அருகிலோ, சோழநாட்டுக் கடற் கரை அருகிலோ உண்மையாக முத்து விளையவில்லை, பிறக்க வில்லை என்பதை உணரவேண்டும். முத்து ஏற்றுமதியான துறைமுகத்தை முத்து விளைந்த இடமாகக் கூறும் வழக்கம் கிரேக்க, உரோம ஆசிரியர்கள் எழுதிய நூல்களிலும் வடமொழி ஆசிரியர் எழுதிய நூல்களிலும் சங்கநூல்களிலும் காணப்படுவ தாகும். அதை வைத்துக்கொண்டு முத்து ஏற்றுமதியான துறை முகத்தை முத்து விளைந்த இடமாகக் கூறுவது தவறு.

மயிலை சீனி வேங்கடசாமி 'பந்தர் பயந்த பயங்கெழு முத்தம்' என்று வரும் பதிற்றுப்பத்து வரியில் காணப்படும் பந்தர் என்பது முசிறிக்கருகில் இருந்தது என்று கொண்டார். பந்தர் என்ற பெயர் அரபுச் சொல் என்றும் எழுதியுள்ளார். ஆனால், பந்தர் என்ற அரபுச் சொல் அக் காலத்தில் சங்கத் தமிழில் நுழைந்ததாகக் கருத முடியவில்லை. முசிறியில் முத்து ஏற்றுமதியானதற்குச் சான்று இருப்பினும் முசிறிக்கு அருகில் பந்தர் என்ற இடம் இருந்ததற்குச் சான்று இல்லை. பந்தர் என்ற பெயர் முத்துகள் விற்கப்பட்ட பெரிய அங்காடியாக இருந்திருக்கலாம். அந்த அங்காடி பந்தலுக்கடியில் இருந் திருக்கலாம். ஆதலின் அந்த இடத்திற்கோ ஊருக்கோ பந்தர் என்ற பெயர் வந்திருக்கலாம். பதிற்றுப்பத்தே 'நன்கல வெறுக்கை துஞ்சும் பந்தர்' (55—4) என்று கூறியுள்ளது. பந்தர் என்ற சொல் பண்டகசாலை என்ற பொருளில் பயின்று வந்திருப்பதைக் காணலாம். முத்து துஞ்சிய பந்தரே, முத்து நிறைந்த பண்டகசாலை இருந்த ஊரே பந்தர் என்று அழைக்கப் பட்டிருக்கலாம். அந்த ஊரை முசிறியினின்று வேறு ஊராகக் கருதலாம். ஒருவகைக் கோமேதகக் கற்கள் (Zircon) 'Pan-tarbes' என்ற இந்தியப் பெயருடன் வழங்கப்பட்டதாக பிளினி எழுதியுள்ளார். வேறு சில மேலைநாட்டு ஆசிரியர்களும் இந்தக் கல்லை இதே பெயருடன் குறிப்பிட்டுள்ளனர். இந்தப் பெயர் ஓர் இந்திய மொழிப் பெயரிலிருந்து வந்ததாக வார்மிங்டன் என்ற வரலாற்று ஆசிரியர் எழுதியுள்ளார்.* இந்த 'பந்தர்

*Pantarbes may be a corruption of an Indian word-Footnote (84)—"The Commerce between the Roman Empire and India" by E. H. Warmington.

பெஸ்' என்ற பெயர் பதிற்றுப்பத்து கூறிய பந்தர் என்ற ஊர்ப் பெயருடன் மிகவும் ஒத்துள்ளதைக் காணலாம். இந்த ஊரிலே யிருந்து கோமேதகமும் ஏற்றுமதியானதாய்ப் பிளினி கூறியுள்ள தால் இதே ஊரே பதிற்றுப்பத்து கூறிய பந்தர் என்று தெரி கின்றது.

பந்தர் என்ற ஊர் பந்தலாயினிக்கொல்லமாக இருக்கலாம். இந்த ஊரின் முற்காலத்துப் பெயர் பந்தர் என்று தெளிவாகத் தெரிகின்றது. Friar Odoric என்ற பாதிரியார் 1321 ஆம் ஆண்டு பம்பாய்க்கு அருகில் இருந்த தாரு என்ற ஊரிலிருந்து புறப்பட்டு, பந்தரானி, கொடுங்கொளூர், கொல்லம் ஆகிய துறைமுகங்கள் வழியாக இலங்கைக்கும் மயிலைத்தோமையார் ஆலயத்துக்கும் சென்றதாக எழுதியுள்ளார். 1290 இல் எழுதிய சீன அரசாங்கக் குறிப்பிலும் மாபாருக்கும் (தமிழகம்) கொல்லத் திற்கும் பந்தரினு (Fandarina) என்ற ஊர்க்கும் சீன நாட்டி லிருந்து பொன் ஏற்றுமதி செய்வது தடை செய்யப்பட்ட செய்தி கூறப்பட்டுள்ளது. ('Foreign notices of South India'— K. A. N.) ஆதலின் இடைக்காலத்தில் பந்தர் என்ற பெயரால் வெளிநாட்டுக்காரர்களால் அழைக்கப்பட்ட துறைமுகமே பந்தர் என்று பதிற்றுப்பத்தில் கூறப்பட்ட ஊராகக் கருதலாம்.

மிகப் பிற்காலத்தில் தெற்கு மலையாளத்தில் இருந்த கொல்லத்தை ஒட்டி வடக்கு மலையாளத்தில் இருந்த பந்தர் என்ற துறைமுகத்திற்கும் கொல்லம் என்ற பெயர் சூட்டப்பட்ட தால் அதை வேற்றுமைப்படுத்திக் கூறப் 'பந்தல் ஆயின கொல்லம்' என்ற பொருளில் பந்தலாயினிக்கொல்லம் என்று அழைத்தனர். தென்மலையாளக் கொல்லத்தில் இருந்து பந்தரில் குடியேறிய சில நாயர் தலைவர்கள் கொல்லம் என்று இந்த ஊருக்குப் பெயரிட்டதாக மலையாளப் பரம்பரைச் செய்திகள் கூறுகின்றன. இந்தப் பந்தலாயினிக் கொல்லத்தை இன்று கொயிலாண்டி என்று அழைக்கின்றனர். கள்ளிக் கோட்டைக்கு அருகில் உள்ளது. சில வரலாற்று ஆசிரியர்கள் இதையே சேரநாட்டுத் தொண்டியாகக் கொண்டனர். நெல்கிண்டா (Nelcynda) என்று மேல்நாட்டு ஆசிரியர்கள் குறிப்பிட்ட துறை முகம் இதுவாகவே இருக்கலாம் என்று கூறினர். ஆனால், வரலாற்று ஆசிரியர்கள் சிலர் இதை ஒப்புக்கொள்ளவில்லை. இந்தக் கொயிலாண்டிக் கருகில்தான் வாஸ்கோடகாமா வந்து இறங்கியதாகக் கூறுவர். இறங்கின இடம் இன்றும் சுட்டிக் காட்டப்படுகின்றது. பந்தர் என்ற சேரநாட்டுத் துறைமுகம் பந்தலாயினிக் கொல்லமாகவே இருக்கலாம். இது முசிறி என்று கருதச் சான்று இல்லை.

(தொடரும்)

சான்றோர் நோக்கும் போக்கும்

[டாக்டர். சொ. சிங்காரவேலன், எம்.ஏ., பி.எச்.டி.,

தமிழ்த்துணைப் பேராசிரியர், அ. வ. அ. கல்லூரி, மாயூரம்]

சான்றோரே உலகை நடத்துவோர் :

வாழ்க்கை என்பது மனிதனுக்குக் கிடைத்த ஓர் அருமை யான வாய்ப்பு; இதனைச் சுவைபட நடத்திக் குறிக்கோளை நோக்கிப் பயணம் செய்யவேண்டியது அறிவு உள்ள மனிதனின் கடன். ஆனால் பலர் நிலை என்ன? எப்படியோ வாழ்ந்து, எப்படியோ தம் வாழ்வை முடித்துக் கொள்வோரே உலகிடைப் பலராக இருக்கின்றனர். சிலரே வாழ்க்கையை ஒரு புனிதமான பயணமாக மேற்கொண்டு நல்லனவே எண்ணி, நல்லனவே கூறி, நல்லனவே செய்து நற்பேறு பெற்று இன்புறுகின்றனர். அவர்களுள்ளும் ஒரு சிலரையே உலகம் மறவாது போற்றி வரு கின்றது. அவர்கள் உரைப்படியே உலகம் இயங்குகின்றது; அவர்களே உலகை நடத்திச் செல்வோராகவும் உள்ளனர். 'கொள்கைப் பிடி'ப்பும் பற்றும் உடைய அத்தகையோரே இமய மாக உயர்ந்து இணையற்று விளங்குகின்றனர். அவர்களின் அமுதமொழிகள் உணர்ந்து தெளிந்த மெய்ம்மொழிகளாக நின்று உலகை நெறிப்படுத்துகின்றன. எத்தனையோ நூற் றாண்டுகள் சென்றாலும் அவை காலவெள்ளத்தில் அழியாது நிற்கின்றன.

சான்றாண்மை எது ?

தம்முடைய உயிரையே இழக்க நேர்ந்தாலும் தம் உயர் பண்பை விட்டு நீங்காத உயர் பேராண்மை உடைய மனிதர் களே 'சான்றோர்' என்று போற்றப் பெறுகின்றனர்; அவர் களுடைய நல்லியல்புகளைச் சான்றாண்மை என்று கூறுவர்.[1]

சால்பிற்கு அடிப்படை ஆய ஐந்து :

எல்லா உயிர்களிடத்தும் அன்பும் இரக்கமும் உடையவர் களாக அத்தகு பெருமக்கள் இருப்பர்; உலகநடை யறிந்து எல்லா உலகமும் வாழவேண்டும் என்று கருதும் பரந்த மனம் உடைமை அவர்களின் சிறப்பியல்பு; கருணை வழியும் நெஞ்சின ராக அன்னோர் வாழ்வர்; பழிக்கு நாணிடும் பண்புடையோராய்த் திகழ்வர்; வாய்மையின் வடிவமாக அவர்கள் விளங்குவர்; சான்

---

1. திருக்குறள் பொருட்பால் அதிகாரம் 99.

ருண்மை என்ற மண்டபத்திற்கு வாய்த்த உறுதியான ஐந்து தூண்கள் என்று இதனைத் தெளிவுறுத்துவர் திருவள்ளுவர்.[2]

"அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால் பூன்றிய தூண்"

ஊழிக்காலமே பெயர்ந்தாலும், தாம் நல்லியல்புகளி னின்றும் பெயராத பேராண்மை உடையவர்கள். இவர்கள்; ஆம்; சான்றாண்மைக் குணங்கள் நிரம்பிய கடல் என்று இவர் களைக் கூறுதல் தகும் என்பதும் செந்நாப்புலவர் மதிப்பீடு;[3]

"ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்கு
ஆழி எனப்படு வார்"

இயற்கைக் குழப்பங்கள் என்ன செய்யும்?

தம்முடைய நெஞ்சத்தால் எல்லாம் வல்ல பரம் பொருளையே எண்ணித் திளைத்து இன்புற்றிருக்கும் இச் சீலமிகு மாந்தர்க்கு உலகிடை நிகழும் இயற்கைக் குழப்பங்கள் முதலிய அனைத்தும் ஒன்றும் செய்யமாட்டா. திருநாவுக்கரசருடைய திண்ணிய நெஞ்சிடை எழுந்த திருவாக்கு ஒன்று இதனையே அறிவுறுத்துகின்றது:

"வானம் துளங்கில் என்? மண் கம்பம் ஆகில் என்? மால்வரையும்
தானம் துளங்கித் தலைதடுமாறில் என்? தண்கடலும்
மீனம் படில் என்? விரிசுடர் வீழில் என்? வேலைநஞ்சு உண்டு
ஊனம்ஒன்று இல்லா ஒருவனுக்கு ஆட்பட்ட உத்தமர்க்கே"

இத்தகைய சான்றோரையே "உத்தமர்" என்ற சொல்லாற் குறிக்கின்றார் அடிகள்; "எங்கெழில் என் ஞாயிறு எமக்கு" என்று இருக்கும் இயல்பு இவர்கட்கு உள்ளது;[5] இத்தகைய சான்றோர்கள் பலரின் மெய்ம்மொழிகள் சங்க இலக்கியத் துள்ளும் காணப்படுகின்றன.

---

2. குறள் அதிகாரம் பா. 3.

3. மேற்படி அதிகாரம் பா. 9.

4. திருநாவுக்கரசர் தேவாரப் பதிகங்கள் திருமுறை 4. பதிகம் 112-பா. 8. ["மண்பாதலம் புக்கு மாகடல் மூடி மற்றேழ் உலகும், விண்பால் திசைகெட்டு இருசுடர் வீழினும் அஞ்சல் நெஞ்சே" 4-94-9; "தப்பி வானம் தரணி கம்பிக்கில் என்" 5-77-6 ஆகிய அப்பர் வாக்கு களையும் உடன் நினைக.]

5. திருநாவுக்கரசர் தேவாரப் பதிகங்கள் திருமுறை 6. பதிகம் 308-பா. 2. ["எங்கெழில் என் ஞாயிறு எமக்கு" திருவாசகம் திருவெம் பாவை பா. 19. உடன் நினைக.]

சங்கச்சான்றோர் வறுமையிற்செம்மை :

சங்ககாலச் சான்றோராகிய நல்லிசைப் புலவர்கள் கல்வியால் விளைந்த பெருமித உணர்வு மிகுந்து[6] அமைதியான பெருவாழ்வு நடத்தி வந்தனர்; அவர்கள் கொள்கையை விடாப்பிடியாகப் பற்றிக் குறிக்கோளிற் சிறிதும் குறையாத நல்வாழ்வு நடத்தினர்; பரிசில் பெற்று வாழும் வறுமை நிலையிலும்கூட அவர்களது பண்புகள் புடமிட்ட பொன்னென ஒளிவிரித்தன. அந்தப் பேரொளி விரியும் பெட்டகங்களாக அவர்கள் அருளிய பாடல்கள் விளங்குகின்றன. வறுமை ஒருவரது வாழ்வில் இருந்தாலும், சிறுமைக் குணங்கள் அவரைப் பற்றமாட்டா என்று கொள்ளத் தக்க சான்றுகளாக அவர்களது இனிய மனத்து எழுந்த செய்யுட்கள் உள்ளன. திருவள்ளுவரும் இது பற்றிச் சிந்தித்துள்ளார்; வறுமை ஒருவருடைய நல்லியல்புகளைத் தாக்குமா என்ற அந்தச் சிந்தனையே ஒரு குறள் வடிவம் பெற்றுள்ளது;[7]

"இன்மை ஒருவற்கு இளிவன்று; சால்பென்னும்
திண்மை உண்டாகப் பெறின்"

இந்தச் சால்புத் திண்மையே அவர்களுடைய ஓவியப் பாட்டுக்களை உலகிடை இறவாப் புகழ் படைத்த 'நிலைப்பாட்டுக்'களாக மாற்றிவிட்டன.

மூலங்கிழாரின் பெருமித உள்ளம் :

பாண்டியன் இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனைக் காணச் சென்றார் ஆவூர் மூலங்கிழார். பரிசில் உடன் பெறாது காலம் தாழ்க்கப் பெற்றார் புலவர். அவருடைய உள்ளம் வருந்தியது; எப்போதும் எதிர்வந்து இன்சொற் கூறிப் பாராட்டிக் கவிதை கேட்டு இன்புறும் வழுதியின் புறக்கணிப்பாகவே இக்காலநீட்டிப்பைக் கருதினார் புலவர்; இருந்து பரிசில் பெற்றிடத் தன்மானமும் கொள்கைப் பற்றும் மிக்க அவருடைய உள்ளம் விரும்பவில்லை; ஒரு பாட்டை ஓதி மீண்டார்; அது புறநானூற்றுள் விளங்குகின்றது;[8] புலவருடைய செம்மாப்புடைய சிந்தையினைப் பிற்காலத்தார்க்கு இனிதின் உணர்த்தி நிற்கும் அப்பாட்டின் சில வரிகள் :

"வெயில்என முனியேன்; பனியென மடியேன்;
கல்குயின் றன்னஎன் நல்கூர் வளிமறை

---

6. தொல்காப்பியம் மெய்ப்பாட்டியல் நூற்பா "கல்வி தறுகண்".
7. திருக்குறள் பொருட்பால் அதிகாரம் 99-பா. 8.
8. புறநானூறு பா. 196.

நாண் அலது இல்லாக் கற்பின் வாள்நுதல்
மெல்லியல் குறுமகள் உள்ளிச்
செல்வல் அத்தை; சிறக்கநின் நாளே''

மங்கல நாணையல்லாது வேறு அணிகலம் பூணாத புலவர்தம் மனைவியை 'நாணலது இல்லாக்கற்பின், வாள்நுதல், மெல்லியல், குறுமகள்' என்று பாட்டுக் குறிக்கின்றது. அதுவும் 'ஈகை அரிய இழை' ஆதலின் கருத்திடை இருந்தது போலும்![9] இத்தகைய வறுமைக் காலத்தேயும் புலவருடைய பெருமித உணர்வு வறுமைப்படவில்லை; மாறாக பெருமைப்படத்தக்க வகையில் ஓங்கியிருந்தமையைக் கவிதை, காலத்தை வென்று நிற்கும் கவிதை, காட்டுகின்றது.

நல்லறிவு உடையோர் நல்குரவு

இதுபோன்றே சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமா வளவனிடத்துப் பரிசு பெறச் சென்ற மதுரைக் குமரனார் என்ற புலவர்க்கும் ஒருபொழுது வாய்த்தது; காலம் நீட்டித்த குறையே. பொறுக்கவில்லை மென்மை வாய்ந்த புலவர் உள்ளம். ''ஆட்சியில் உள்ளவர் என்பதற்காக நாற்படைகள் வாய்ந்த வேந்தர்களது அரசாட்சிச் செல்வத்தை யாம் மதிப்பதில்லை; சிற்றூர் மன்னரே யாயினும் எம்முடைய பாடறிந்து ஒழுகும் மன்னர்களையே எம்மைப் போல்வார் மதித்துப் பாராட்டுவர். மிகப் பெருந்துன்பமே உற்றபோதும், உணர்ச்சி இல்லாதாரால் உதவப்படும் உடைமைகளை எண்ணியும் பார்ப்பதில்லை நாங்கள்; நல்லறிவு உடையோர் நல்குரவையேயாம். உவந்து பெரிதும் உள்ளுவோம்'' என்கின்றது புலவரது பொறுமை யறம் சிறந்த நன்னெஞ்சம். புறநானூற்றுள் விளங்கும் பொன்வரிகள் பலவற்றுள் இப் பாட்டின்கண் அமைந்தவை கீழ்வருபவை;[10]

''சிறூர் மன்னர் ஆயினும், எம்வயின்
பாடு அறிந்து ஒழுகும் பண்பி னோரே;
மிகப்பேர் எவ்வம் உறினும், எனைத்தும்
உணர்ச்சி இல்லோர் உடைமை உள்ளேம்;
நல்லறிவு உடையோர் நல்குரவு
உள்ளுதும் பெரும! யாம், உவந்து நனிபெரிதே''

பெருந்தலைச் சாத்தனார் பேச்சு

கடியநெடு வேட்டுவன் என்பானிடத்துச் சென்ற பெருந்தலைச் சாத்தனார்க்கும் இத்தகைய காலநீட்டிப்பு நேர்ந்தது போலும்; அவர் பாடிய பாடற்பொருளும் இவ்வாறு அமைந்துள்ளது;[11]

---

9. புறநானூறு பா. 127.
10. மேற்படி பா. 197.
11. மேற்படி பா. 205.

"முற்றிய திருவின் மூவ ராயினும்
பெட்பின்று ஈதல் யாம்வேண் டலமே"

என்று பெருமைபட மொழியும் பேறு வறுமையிற் செம்மை வாய்ந்த புலவர்க்குக் கிட்டிற்று.

ஔவையாரின் அறிவுரை :

ஔவையாருடைய நட்பினைப் பெற்றிருந்த அதியமான் நெடுமான் அஞ்சியிடம்கூட இவ்வாறு கால நீட்டிப்புப் பிழை ஒருமுறை நிகழ்ந்துவிட்டது. குணக் குன்றுகிய ஔவை யாருடைய உள்ளம் கன்றியது; தன்மானத்தாற் குன்றியது. வாயில் காவலனை நோக்கி வருத்தத்தின் அடிப்படையில், பெரு மித உணர்வு தோன்றப் பேசினார் :[12]

"வாயி லோயே! வாயி லோயே! ......
பரிசிலர்க்கு அடையா வாயி லோயே!
கடுமான் தோன்றல் நெடுமான் அஞ்சி
தன்அறி யலன்கொல்? என்அறி யலன்கொல்?
அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென
வறுந்தலை உலகமும் அன்றே"

என்றும், உலகம் பெரிது என்றும், "எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே" என்றும் உள்ள புகழ்மிக்க பொருளாழமுடைய வரிகள் இதன்கண் அமைந்துள்ளன.

அகம் கலவாப் பரிசில் வேண்டாமை :

வெளிமான் துஞ்சியபின் அவன் தம்பி இள வெளிமான் பரிசு கொடுக்க முற்பட்டு மன நிறைவின்றிக் கொடுத்தான்; பெருஞ்சித்திரனார் மிக வருந்தி,

"'வருக' எனவேண்டும் வரிசை யோர்க்கே
பெரிதே உலகம் பேணுநர் பலரே"

என்று கூறியவர், "எழு இனி நெஞ்சம்! செல்கம்" என்று தம் முள்ளத்தோடு பேசிப் புறப்பட்டுச் சென்ற மன உறுதியைப் புறப்பாட்டிற் காணலாம்.[13]

"அகம்நக வாரா முகன்அழி பரிசில்" என்று அவ்விள வெளிமான் பரிசினைத் தாம் ஏலாமைக்குரிய காரணத்தைப் பாட்டினுள் பகர்கின்றார் புலவர். 'மன மகிழ்ச்சியோடு கொடுக் காத கொடை'யைக் கொள்ளாது சென்றமையைப் பாடல் குறிப் பாய்க் கூறவும், 'சிறிது கொடுப்பக் கொள்ளாது சென்ற'தாக அடிக்குறிப்பு உரைப்பது பொருந்துவதாகத் தோன்றவில்லை; ஆதலின், 'அள்ளவைக்' குறித்ததன்று புலவர் நெஞ்சம், அடிப்

12. புறநானூறு பா. 206.
13. மேற்படி பா. 207.

படையாகிய 'அகமலர்ச்சியையே' கருதிற்று என்பது வீறுடைய நெஞ்சின் நிலையைப் புரிந்து கொள்ள உதவும்.

காணுக் கொடை வேண்டாமை :

இப் பெருஞ்சித்திரனார் அதியமானிடம் சென்றபோது, அவரை நேரிற்கண்டு கொடுக்கத் தவறிவிட்டான் அதியமான்; அவனைக் கண்டு பரிசில் பெறுவதையே நோக்கியிருந்த பெருஞ் சித்திரனார் நெஞ்சு வருந்திற்று;[14]

''காணாது ஈத்த இப்பொருட்குயான் ஓர்
வாணிகப் பரிசிலன் அல்லேன்; பேணி
தினைஅனைத் தாயினும் இனிது—அவர்
துணைஅளவு அறிந்து நல்கினர் விடினே''

என்ற வரிகள் புலவருடைய தனி வீறுடைய மன உறுதியை இனிது புலப்படுத்துகின்றன.

அவலமும் பெருமிதமும் :

மூவன் என்பானிடம் பரிசில் பெறச் சென்ற பெருந் தலைச் சாத்தனார்க்கும், சேரமான் குடக்கோச் சேரல் இரும்பொறை யிடம் பரிசில் பெறச் சென்ற பெருங்குன்றூர் கிழார்க்கும் இவ் வாறே மனம் வருந்தும் நிலைகள் வந்துற்றன; அவர்கள் பரிசில் பெறுது வருந்திப் பாடிய பாட்டுக்கள், புறப்பாட்டுள் காணப் படுகின்றன.[15]

''ஈயாய் ஆயினும் இரங்குவேன் அல்லேன்;
நோயிலை ஆகுமதி பெரும''

என முன்னவரும்,

''இடுக்கண் மனையோள் தீரிய, இங்கிலை
விடுத்தேன்; வாழியர் குருசில்! உதுக்காண்
அவல நெஞ்சமொடு செல்வல்''

எனப் பின்னவரும் பாடும் பாடற் பகுதிகளில், துன்ப உணர்வு பெருமிதம் தோன்ற வெளிப்படுதல் காணலாம்.

இறப்பையும் கண்டு அஞ்சாப் போக்கு :

தம்முடைய வாழ்வில் உயிர் கொள்கைப் பிடிப்புடைய நல்லோர் வாழ்ந்து வருவதாலேயே, உலகம் இன்னும் நிலை பெற்று நிற்கிறது என்று கூறுவது மிகையாகாது. ''பண்பு உடையார்ப் பட்டு உண்டு உலகு'' என்று செந்நாப் புலவர் கூறுவது முற்றிலும் உண்மையே;[16] இறப்பைக் கண்டு சிறிதும்

14. புறநானூறு பா. 208.
15. மேற்படி பா. 209, 210.
16. திருக்குறள் அதிகாரம் 100-பா. 6.

அஞ்சுவதும் இல்லை இவர்கள். இறப்பு என்பதும் ஓர் இயற்கை நிகழ்ச்சி என்பது இவர்கள் கொள்கை. எப்படிப் பிறப்பு என்பது இயல்பாக நிகழ்வதொன்றோ அது போன்றது இது என்றே இவர்கள் கருதுகின்றனர். 'உற்ற நோய் நோன்றல், உயிர்க்கு உறுகண் செய்யாமை' என்ற நிலைகளில் ஒன்றி நின்ற தவம் உடையவர்கள் இவர்கள்;[17] அதனால் 'இறப்புக் கடவுள்' என்று கூறப்படும் கூற்றுவனையும்கூட வென்று விடலாம் என்ற அழியாத நம்பிக்கை இதற்குச் சான்றோரிடம் இயல்பாக உள்ளது; திருவள்ளுவர் பாடுகின்றார்:[18]

> "கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
> ஆற்றல் தலைப்பட் டவர்க்கு"

"கூற்றம் குதித்தல் கூடலும் ஆமே" என்று திருவள்ளுவர் கருத்தைத் தெளிவுறுத்துகின்றார் திருமூலர்.[19]

அருணகிரிநாதர், முருகன் அடிமைத் திறத்தில் மேம்பட்டு நின்றவர்; "பட்டிக்கடாவில் வரும் அந்தகா" என்று விளித்தும், "தண்டாயுதமும் திரிசூலமும் விழத்தாக்கி யுன்னைத் திண்டாட வெட்டி விழவிடுவேன்" என்றும் கூறும் பாடற் பகுதிகளைக் 'கந்தர் அலங்காரத்'திற் காண்கின்றோம்.[20] பாரதியும், காலனை விளித்து 'என் காலால் எட்டி மிதிக்கின்றேன்' என்று பாடும் நிலையைக் காண்கின்றோம்.[21] இவையனைத்தும் எதனைக் காட்டுகின்றன? சான்றோர்கள் இறப்பினைக் கண்டு சிறிதும் அஞ்சாத மன உறுதி உடையார் என்பதனையே அன்றோ? தாம் பின்பற்றும் நெறியில் தலைப்பட்ட உறுதி உடைமையே இவர்கட்கு இத்தகு அஞ்சாமையைத் தந்தன என்று கூறல் மிகையன்று.

சான்றோர் வாழ்வுதரும் படிப்பினை:

உலகம் இத்தகைய பெருமக்களைக் கண்டு தனக்குப் படிப்பினையை மேற்கொள்ள வேண்டும். எவ்வாறு புகழ்மிக்க—உறுதியான—கொள்கைப் பிடிப்புடையவர்களாய் வாழ்ந்தனர் என்று எண்ணும்போதே, நாமும் இத்தகைய வாழ்வுடையவராதல் வேண்டும் என்ற எண்ணம் நெஞ்சிடை நிலைபெறல் வேண்டும். இவ்வெண்ணம் மக்களிடை நிலைபெறுமாயின், இன்று உலகிடைப் பரவலாகக் காணும் 'கொள்கை மாறி'கள் திருந்துவர்; காலையில் ஒரு கொள்கை, நடுப்பகலில் பிறிதொன்று,

---

17. திருக்குறள் அதிகாரம் 27-பா. 1.
18. மேற்படி அதிகாரம் பா. 9.
19. திருமந்திரம் ["நமன்வரின் ஞானவாள் கொண்டே எறிவன்" பா. 2968 உடன் வினைக.]
20. கந்தர் அலங்காரம் பா. 64, பா. 25.
21. பாரதியார் கவிதைகள் ஞானப்பாடல்கள் காலனுக்கு உரைத்தல்.

மாலையில் மற்றொன்று, நள்ளிரவில் வேறொன்று என்று அடிக்கடி தம் நோக்கையும் போக்கையும் மாறும் போக்குடைய மனிதர்களை இன்று நாம் காணுகின்றோம். நிலையான கொள்கை இல்லாத இவர்களை நம்பிச் செல்லும் மக்கள் நிலை என்ன ஆகும்? தாமே திருந்தாத இவர்களால், நாடு திருத்தமுற்ற நல்வாழ்வு காணும் என்று எதிர்பார்த்தல் கூடுமோ? தம்முடைய பதவி, தம்முடைய நல்வாழ்வு, தம்முடைய குடும்பம் என்ற சிறு வட்டமே சிந்தையில் நிலவும்போது இவர்களால் தூயதொண்டு தலைப்படலும் உண்டோ? இவற்றையெல்லாம் கடந்த 'மன்பதை உயர்வு' கருதும் மாண்புடைமை யன்றோ பொது வாழ்வில் உள்ளோர்க்கு உயிராகக் கருதத்தக்கது! அஃது இல்லாத வரையில் இவர்களை உலகம் போற்றாது; பாராட்டாது; நம்பாது; பின்பற்றாது.

பின்பற்றத் தக்க போக்கு :

பழந்தமிழ்ச் சான்றோர்கள் குறிக்கோளில் தம் உயிரையே வைத்திருந்தனர். இக்காலப் பெரும் பான்மை மாந்தர்க்குக் குறிக்கோள் என்று ஒன்று உண்டோ என்று கூறவும் இயல வில்லை; தன்னலம் என்ற ஒன்றே இவர்களது மூச்சாக உள்ளது என்று கூறலாம். ஆனால் இவர்கள் பேசுவதோ, 'நாடு' 'நாடு' என்றேதான்; அந்தப் பேச்சைக் கேட்டு மக்கள் மயங்கி விடுகின்றனர்; 'சொல்வலை வேட்டுவர்'களாகிய இவர்களுடைய அழகிய சொற்களில் பலரும் வீழ்ந்து மயங்குகின்றனர்; பெரும்பான்மை மக்களின் இத்தகு போக்கே, இன்று 'நல்லோர் யார்' 'அல்லோர் யார்' என்று பகுத்தறியும் உணர்வை இழக்கச் செய்கின்றது. ஆகவே, தீயோன் ஒருவனும் பெரும்பான்மையான மாந்தரது சார்பைப் பெற வாய்ப்பு உண்டாகின்றது; நல்லோன் ஒருவனும், மக்கட் சார்பு குறையப் பெறும்நிலை வந்துவிடுகின்றது. ஆனால், காலம் இவர்களது உண்மைக் கோலத்தை உணர்த்திவிடக் காண்கின்றது; தம் கண்களை மூடிய படலம் நீங்கப் பெற்று மக்கள் விழித்துக் கொள்கின்றனர். அவ் விழிப்பு நிலை, விழுப்பம் மிக்க தூயமாந்தர்க்கும் இத்தகு தீய மாந்தர்க்கும் இடையே உள்ள தொலைவைத் துலக்குகின்றது. சான்றோர் சென்ற நெறி விளக்குகின்றது; அவர்களின் நோக்கும் போக்குமே இன்று மட்டுமன்று; என்றும் மறவாது பின்பற்றத்தக்க மாண்புடையவை.

இதனாலேயே நல்லோர் இயல்பை, நம் இலக்கியம் காட்டும் சான்றோர் நோக்கினை நமக்கு நாமே நினைவூட்டிக் கொள்ள வேண்டிய நிலை தவிர்க்க இயலாததாக உள்ளது.

வங்க மொழிப் பேரறிஞர்
டாக்டர். சுனித்குமார் சட்டர்ஜி மறைவு

இந்தியாவில் சிறந்த மொழியியல் வல்லுநர்களாகத் திகழும் ஒரு சிலருள் தலைசிறந்து விளங்கியவர் 1977 மே 29இல் மறைவுற்ற பேரறிஞர் டாக்டர். சுனித்குமார் சட்டர்ஜி அவர்கள். வங்க மொழியில் மட்டுமன்றி ஆங்கிலம், வடமொழி, இந்தி போன்ற பலமொழிகளில் அவர் அறிஞராக விளங்கினர். அவருக்குத் திராவிட மொழிகள்பாலும் ஈடுபாடிருந்தது. குறிப்பாகத் தமிழ் மொழிமேலும் தமிழ்க் கடவுளான முருகன்மீதும் அவர் நீங்காத பற்றுவைத்திருந்தார். தம் வங்கமொழிப் பெயரைத் தனித் தமிழில் 'நன்னெறி முருகன்' என்று தமிழில் கையெழுத்துப் போடுவதில் தணியாத ஆர்வம் பெற்றிருந்தார். திராவிட மொழியியலில் அவர் ஆழ்ந்த புலமை பெற்று விளங்கினர். அவருடைய பன்மொழிப் புலமையைப் பாராட்டும் வகையில் அவருக்கு 1963 இல் இந்திய அரசு 'பத்ம விபூஷன்' என்ற விருதை வழங்கியது. 1964 இல் மானிட இயல் தேசீயப் பேராசிரியராக இந்தியப் பேரரசு அவரைத் தேர்ந்தெடுத்தது. இவ்வாறு தேசீயப் பேராசிரியராகத் தேர்ந்தெடுக்கப் பெறுபவர்கள் தம் வாழ்நாளிறுதிவரை அப் பொறுப்பில் இருப்பர். நூலகஇயல் தேசீயப் பேராசிரியராக டாக்டர். எஸ். ஆர். ரங்கநாதன் அவர்கள் மறையும் வரை இருந்தது குறிப்பிடத்தக்கது.

1890 நவம்பர் 26 இல் கல்கத்தா மாநகரில் தோன்றிய 'நன்னெறி முருகனர்' கல்கத்தாப் பல்கலைக் கழகத்தில் பயிலும் போதே பல பரிசுகளைப் பெற்றார். அந்தப் பல்கலைக் கழகத்திலேயே ஆங்கிலத் துறையில் தம் பணியைத் தொடங்கினர். லண்டன் பல்கலைக் கழகத்தில் மொழியியல் (1920) பயின்றார். 1922முதல் மொழியியல் துறையில் பேராசிரியராகத் திகழ்ந்தார். பலமுறை வெளிநாடுகட்குச் சென்றுள்ளார். 1958 இல் சோவியத் அறிவியல் பேராயத்தின் உறுப்பினராகத் திகழ்ந்தார். தம் இறுதிவரை 'சாகித்ய அகாதெமியின்' தலைவராகப் புகழொடு வாழ்ந்தார்.

ஆங்கிலம், வங்காளம், இந்தி ஆகிய பலமொழிகளில் 380 நூல்களை அவர் இயற்றியுள்ளார். 'வங்கமொழியின் தோற்றமும் வளர்ச்சியும்' என்ற இவர்தம் ஆய்வுநூல் மிக விரிந்த முறையில் எழுந்ததாகும். அத் துறையில் இதனை விஞ்சும் வேறுநூல் இதுவரை எழுதப் பெறவில்லை.

சைவசித்தாந்தக் கழகம் சிறந்த தமிழ் இலக்கிய நூல்களைச் செம்மையான முறையில் வெளியிட்டு வருவதை அவர் என்றும் போற்றுவதுண்டு. மறைமலையடிகள் நூல்நிலையத்தைப் பார்வையிட்டு மிக அரிய முயற்சி என்று பாராட்டியுள்ளார். இத்தகைய பேறிஞரின் மறைவு இந்திய மொழியியல், இலக்கியத் துறைகட்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

சுனித்குமார் சட்டர்ஜி அவர்களின் பாராட்டுரை

உலக மொழியியல் துறைப் பேரறிஞரும், வரலாற்றுத் துறைப் பேராசிரியரும் ஆன டாக்டர் சுனித்குமார் சட்டர்ஜி அவர்கள் கழகத்தின் தமிழ்த் தொண்டினையும், மறைமலையடிகள் நூல்நிலையப் பாங்கினையும் பாராட்டி வழங்கிய கருத்துரை வருமாறு :

Some of the finest achievements of the Indian mind and spirit—and for the matter of that of the mind and spirit of Mankind as a whole—have been through Tamil—through the literature and art of Tamil Nad. Tamil literature is a great heritage not only for Tamilakam but also for the whole of India. The Saiva Siddhanta Publication House of Tirunelveli and Madras is doing work of the highest cultural value for the last 40 years, and it is to be congratulated on the fine achievements which it has to its credit. Already 1008 volumes have come out dealing mainly with the literature, philosophy, religion, and culture of Tamil people, and I feel very happy to be able to pay this visit to this fine institution, the Maraimalai Adigal Library in honour of one of the great inspires and masters of Tamil studies, the late Swami Sri Vedachalam (Maraimalai Adigal). It is very pleasing to find his memory so well preserved in this beautiful library, which invites people to quiet study and serious work. May the library and its allied institutions continue to prosper, for bringing Tamil and all that of stands for to the forefront, and for the eternal glory of India in her attempt to serve Humanity.

November 3,
1960.

Suniti Kumar Chatterji
(நன்னெறிமுருகன்).

Emeritus Professor of Comparative Philology in the University of India, and Chairman, West Bengal Legislative Council.

குறிப்பு : டாக்டர் சட்டர்ஜி அவர்கள் மொழியியல் துறையிலும், வரலாற்றுத் துறையிலும் பேரறிஞர் என்பதும், தமிழ்மொழியின் சிறப்பினை உணர்ந்தவர் என்பதும் உண்மையே யாயினும் டாக்டர் ஜி யூ. போப், டாக்டர் கால்டுவெல் ஆகியோரைப் போன்று தமிழ் மொழிக்கே தம்மைக் கொடையாக (தியாகம்) தந்தவரல்லர். இதற்குக் காரணம் அவர் வாழ்ந்த வடபுலச் சூழலேயன்றி வேறில்லை எனின் மிகையாகாது.

செய்திகளும் குறிப்புகளும்

சிலப்பதிகாரத் தொடர் சொற்பொழிவுகள் நிறைவு விழா

மயிலை இலக்கிய வட்டத்தின் சார்பில் 25-5-77 இல் மயிலை, கிழக்கு மாடவீதியிலுள்ள பாரதிய வித்யாபவன் அரங்கில் சிலப்பதிகாரத் தொடர் சொற்பொழிவுகள் நிறைவு விழாவும், அச் சொற்பொழிவுகள் நிகழ்த்திய சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்கட்குப் பாராட்டு விழாவும் நடைபெற்றன. விழாவிற்கு, முன்னாள் உயர்நீதிமன்ற நடுவர் திரு. எஸ். மகாராசன் அவர்கள் தலைமை தாங்கிச் சிலம்புச் செல்வர்க்குப் பொன்னாடை போர்த்தினார்.

'இராமாயணம்' 'துறக்க நீக்கம்' நூல்கள் வெளியீட்டு விழா

பேராசிரியர் எஸ். இராமகிருட்டிணன் எழுதிய 'Ramayana' 'Paradise Lost' என்னும் இரு ஆங்கில நூல்கள், புதுதில்லி Peoples Publishing House, சென்னை நியூ சென்சுரி புத்தக வெளியீட்டாளர் ஆகியோரால் 30-5 77 இல், சென்னை மத்திய நூலக அரங்கில் வெளியிடப்பெற்றது. இவ் வெளியீட்டு விழா, சாகித்ய அகாடமி துணைத் தலைவர் திரு. K. R. சீனிவாச ஐயங்கார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாண்பமை நீதிபதி எம். எம். இசுமாயில் அவர்கள் நூல்களை வெளியிட்டார். அறிஞர் பலர் பாராட்டுரை வழங்கினர்.

தென்காசி, திருவள்ளுவர் கழகப் பொன்விழா

தென்காசி திருவள்ளுவர் கழகம் தோன்றி 50 ஆண்டுகள் சிறப்புற நடைபெற்று 1-6-77 முதல் 7-6-77 முடியப் பொன் விழாக் கொண்டாடியது தமிழ் மக்கட்குப் பேருவகை தருவதாகும். முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் முதல்நாள் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார். மற்ற 7 நாள்களில் பேரறிஞர் சிலர் தலைமையில் புலவர்கள் பலர் திருக்குறளின் மாண்புபற்றி உரையாற்றினர்.

கவிஞர் சி. து. கன்னிசாமியவர்கள் மணிவிழா

கவிஞர் சி. து. கன்னிசாமி அவர்களின் மணிவிழா, 23-5-77இல் கயப்பாக்கம் அறப் பேரொளி திரு. முத்துலிங்க ரெட்டியார் அவர்களின் சீரிய தலைமையில், கண்டறச்சேரி கவிஞர் இல்லத்தில் சிறப்புற நடைபெற்றது. ஊரவரும், உற்றார், உறவினர் சுற்றத்தார் ஆகியோரும் வந்திருந்து விழாவினைச் சிறப்பித்தனர். பொலம்பாக்கம் முத்துமல்லா ரெட்டியார் அவர்கள் சார்பில் ஆயிரம் ரூபாயும், குருகுலத்தின் சார்பில் 500 ரூபாயும் செலவிடப்பட்டன. கவிஞர் அவர்கட்குப் பொன்னாடை போர்த்தப்பட்டு ரூபா. 3000 நிதிபாகவும் வழங்கப்பட்டது. அறிஞர்கள் பாராட்டுரை வழங்கிய பின் கவிஞர் நன்றியுரை கூறினார். இவ் விழாவில் 'அபிராமி இரட்டைமணி மாலை' என்ற நூல் வெளியிடப்பெற்றது.

தென்னிந்திய புகைவண்டி நிலையத்தின் பெயர் மாற்றம்

1977 சூன் 15 இல் ஒலவாக் கோட்டுப் பகுதியிலுள்ள 'வெட்டிக் கரை' என்ற புகைவண்டி நிலையத்தின் பெயர் 'வல்லத்தோல் நகர்' என்று மாற்றப் பெறும்.

—இந்து 10 – 5 – 77

பள்ளி இறுதித் தேர்வில் முதலிடம் பெற்ற மாணவர்

கடந்த மார்ச்சுத் திங்களில் நடைபெற்ற தமிழ்நாடு பள்ளி இறுதித் தேர்வில் தேர்வு எழுதிய மாணவர்களில் 55 விழுக்காடு பேர் தேர்வு

பெற்றுள்ளனர். இவர்களுள் தஞ்சை கலியாணசுந்தரம் உயர்நிலைப் பள்ளி மாணவன் திரு. T. இராஜாராம், 600க்கு 570 மதிப் பெண்கள் பெற்றுத் தமிழ்நாட்டில் முதல்வனாகத் தேர்வு பெற்றுள் ளமை குறிப்பிடத்தக்க செய்தியாகும். தஞ்சை சேக்ரட் ஹார்ட் (Sacerd Heart) உயர்நிலைப்பள்ளி மாணவி செல்வி எஸ். அனுராதா 562 மதிப்பெண்கள் பெற்று மாநிலத்தில் இரண்டாவது இடத்தையும் மாணவியருள் முதலிடத்தையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆரல்வாய்மொழி சி. ந. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் மறைவு

உயர்திரு சி. ந. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் தமது 88 ஆவது அகவையில் 26-5-77 இரவு 7 மணிக்கு இறையடி சேர்ந்தார்கள் என்ற செய்திகேட்டு வருந்துகிறோம். திரு. பிள்ளை அவர்கள் 1938 முதல் 1971 பிப்ரவரி வரை கழகச் செயற்குழு உறுப்பினராக இருந்தனர். 1916 முதல் மறைத்திரு மறைமலையடிகளாரிடம் அன்பு பூண்டு அவர்கள் எழுதிய நூல்களை முறைபாக வாங்கிக் கற்றுவந்ததோடு அடிகள் நூல் வெளியீட்டுக்கு ஓரளவு பொருளுதவி செய்து வந்தனர். கழக அமைச்ச ரவர்களிடமும் ஆட்சியாளரிடமும் உடன்பிறந்தார் போல அன்பு காட்டிப் பழகி வந்தவர்களாவர். அவர்களுடைய மக்கள் திரு. தமிழ் மறை, திரு. மெய்கண்ட சிவம், திரு. அன்புமலர் ஆகியோருக்கும் அவர் தம் குடும்பத்தார்க்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்ளு கிறோம். மக்கள் மூவரும் தந்தையாரின் புகழோங்க நடந்து நலம் பல பெற்று வாழ்வார்களாக! திரு. பிள்ளையவர்களின் இன்னுயிர் இறை யடியில் இன்புறுவதாக.

மதிப்புரை

இலெமுரியா முதல் அரப்பா வரை

[ஆசிரியர்: பன்மொழிப் புலவர் இரா. மதிவாணன். வெளியீடு: சேகர் பதிப்பகம். 66, பெரியார் தெரு. எம். ஜி. ஆர். நகர், சென்னை-83. விலை: ரூ. 9-00].

மாந்தன் பிறந்தகம் கடலுள் மூழ்கிய குமரிக் கண்டமே என்னும் கருத்தை வலியுறுத்தித் தக்க அகச்சான்று புறச் சான்றுகளுடனும் பல்துறை நூல் மேற்கோளுடனும் வரை படங்களுடனும் எழுதப் பட்டுள்ளது இந் நூல். மொழி ஞாயிறு பாவாணர் அவர்களின் அணிந் துரை நூலின் சிறப்பை விளக்குகின்றது.

கல்வெட்டு எழுத்துக்களில் திருக்குறள்; வட்டெழுத்தில் திருக்குறள்.

[பேராசிரியர் ஜி. சிரோமணி அவர்களும் மற்றும் துணையாசிரியர்கள் மூவரும்: சென்னைக் கிறித்துவக் கல்லூரி, தாம்பரம்.]

தமிழ் எழுத்துக்களின் வரிவடிவ வளர்ச்சி இன்னும் புதிராகவே உள்ளது. அசோக மன்னன் காலத்தில் நிலவிய பிராமி வடிவத்திலி ருந்தே இந்திய மொழிகளின் வரிவடிவங்கள் தோன்றின என்று பெரும்

பாலோர் கூறிவரினும் தமிழ் மொழியின் வரிவடிவம் 'தமிழி' என்ற தமிழ் வரிவடிவத்தின் வளர்ச்சியே என்று சில ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். இதுபற்றிய ஆய்வில் ஈடுபட்டுள்ள அறிஞர்களில் சென்னைக் கிறித்துவக் கல்லூரி, புள்ளியியல்துறைப் பேராசிரியர் திரு. ஜி. சிரோமணி அவர்கள் குறிப்பிடத் தக்கவர் ஆவர். அவர் அத்துறையில் ஈடுபாடுள்ள அறிஞர்களின் துணைகொண்டு தமிழ்க் கல்வெட்டுக்கள் அனைத்தையும் படித்து ஆய்வு செய்து வருகின்றார்.

கல்வெட்டுக்களைப் படிப்பது எளிய செயலன்று. அவற்றை முறையாகப் பயின்றதுடன் பிறருக்கும் அம்முறையைக் கற்றுத் தரும் முயற்சியில் ஈடுபட்டுப் பேராசிரியர் சிரோமணி அவர்கள் மேற்குறிப்பிட்ட இரு நூல்களை உருவாக்கி வெளியிட்டுள்ளனர்.

'கல்வெட்டு எழுத்துக்களில் திருக்குறள்' என்ற நூலில் திருக்குறள் முழுவதையும் விஜயநகர, பாண்டிய, தெலுங்கு சோழ, சோழ, பல்லவ மன்னர்களின் கால எழுத்துக்களில் அச்சிட்டுள்ளனர். சிறப்பாகக் காமத்துப்பால் முழுவதையும் வள்ளுவர் காலத்தில் நிலவிவந்த தமிழ் பிராமி வரிவடிவத்தில் ஆசிரியர்கள் தந்துள்ளனர். வள்ளுவர் அந்த வடிவத்தில்தான் திருக்குறளை எழுதினர் என்று நூலாசிரியர்கள் குறிப்பிடும்போது நமக்குப் பெருவியப்பாக உள்ளது. நமக்கு நன்கு தெரிந்த குறள்களைப் பழைய வரிவடிவங்களில் கொடுத்திருப்பது அவ்வடிவங்களை அறிந்து கொள்வதற்கும் அவ் வடிவங்களில் வெளிவந்துள்ள பழைய கல்வெட்டுக்களை நாமே படித்துத் தெரிந்து கொள்வதற்கும் பெருந் துணையாக இருக்கும் என்பதில் யாதொரு ஐயமுமில்லை. இதன்கண் கல்வெட்டு எழுத்துக்களில் பொறிக்கப்பெற்ற திருக்குறள் டாக்டர் மு. வ. திருக்குறள் தெளிவுரையிலுள்ள திருக்குறளின் படியே அமைந்துள்ளதாம்.

வட்டெழுத்தில் திருக்குறள் என்ற நூலில் பாண்டிய நாட்டில் வட்டெழுத்து பழைய தமிழ் பிராமி வடிவத்திலிருந்து எப்படி வளர்ச்சியடைந்தது என்பதை 7, 8, 10, 11 ஆம் நூற்றாண்டுகளில் காணப்பட்ட வட்டெழுத்துக்களைக் கொண்டு திருக்குறளில் சில அதிகாரங்களை வட்டெழுத்திலும் இப்போது வழக்கிலுள்ள வரிவடிவிலுமாக அச்சிட்டு விளக்கியுள்ளனர்.

இவ்விரு நூல்களையும் வெளிக்கொணர ஆசிரியர்கள் எடுத்துக்கொண்டுள்ள பெருமுயற்சியைப் பாராட்டுகிறோம். இதே முறையில் சிறிய அளவில் திருக்குறளில் ஒரு சில அதிகாரங்களை மட்டும் எல்லா வரிவடிவங்களிலும் அச்சிட்டு வெளியிட்டால் தமிழ் எழுத்து வரிவடிவ ஆராய்ச்சியாளர்க்குப் பேருதவியாக இருக்கும். இரு நூல்களின் இறுதியிலும் ஒவ்வொரு வரிவடிவத்திற்கும் நெடுங்கணக்கு விளக்கப் பட்டியல் இணைக்கப்பட்டுள்ளமை பயில்வார்க்குப் பேருதவியாக இருக்கும். நூலாசிரியர்கள் இந் நூல்களை வெளிக்கொணர எடுத்துக் கொண்டுள்ள கடும் உழைப்பிற்குத் தமிழ்கூறு நல்லுலகம் என்றென்றும் கடமைப் பட்டதாயிருக்கும்.

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை, 2/140, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில் திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.

ஆசிரியர் : வ. சுப்பையா.

பதிவு எண் : M. 4899

பிற பதிப்பாளரின் புதிய வெளியீடுகள்

இலக்கண ஆய்வுவினைச்சொல்—டாக்டர் மொ. இசரயேல்	5	00
சங்ககால எழுத்தியல்—டாக்டர் தி. நடராஜன்	4	00
காலக் கனிவு—ஜி. ஆர். தாமோதரன்	7	00
திருப்புகழ் விரிவுரை (9ஆம் தொகுதி) —திருமுருக கிருபானந்த வாரியார்	10	80
தத்துவமும் பக்தியும்.—அ. ச, ஞானசம்பந்தம்	7	00
பின்னவன் பெற்ற செல்வம்—மு. மாணிக்கம்	4	00
தமிழ் இலக்கியக் கொள்கை (2ஆம் தொகுதி) —ச. வே. சுப்புரமணியம், க. த. திருநாவுக்கரசு	10	50
தமிழக நாட்டுப் பாடல்கள் —மு வை. அரவிந்தன், எம்.ஓ.எல்.	9	00
தெய்வ வழிச் சிந்தனைகள்—இரத்தின சண்முகனார்	8	00
குடும்ப வழிகாட்டி—சரோஜா குஞ்சிதபாதம்	5	00
தாயும் சேயும்—K. வெங்கட்ராவ்	5	00
இரத்த புஷ்பங்கள்—கவிஞர் கண்ணதாசன்	1	50
பகவத் கீதை—கவிஞர் கண்ணதாசன் உரை	3	00
மயன் கவிதைகள்—க. நா. சுப்பிரமணியம்	16	00
கன்னிப்பாவை (இருபகுதிகள்)—மணிவாசகன்	30	00
பொன் குஞ்சு—வீராசாமி	4	00
புத்தகம் பைண்டு செய்வது எப்படி—கினி	10	00
சகாராவைத் தாண்டாத ஒட்டகங்கள்—ராசன்	3	00
இங்கே போயிருக்கிறீர்களா?—சாவி	9	90
ஒட்டுப் புல்—பஞ்சு	4	00
டிரான்சிஸ்டர் ரேடியோ சர்விசிங்—மின்னணு	3	50
சிலம்பணி மகளிர்—கு. திருமேனி	4	50
நாடகச் செல்வம் (சிறப்பு மலர்)	5	00
மனம் விட்டுச் சிரியுங்கள்—தஞ்சை குஞ்சிதபாதம்	5	00
தேவி புவனேஸ்வரி—நஜன்	3	00
உலக மகா புருஷர்கள் ,,	6	00
நாயகன் நாயகி—கோவி மணிசேகரன்	4	00
சந்திரோதயம்— ,,	17	50
வாழைமரம்—நா. சண்முகம்	10	00
பணக்கோவில்— ,,	6	50
தென் அமெரிக்கப் பயணக்கதை—மணியன்	4	50
ஓ! அன்றில் பறவைகளே!—செ. கந்தசாமி	5	00
காதலர் சொர்க்கம்—மாயாவி	10	00

அப்பர் அச்சகம், சென்னை-1.